Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 தை 02 ஹிஜ்ரி 1426 துல்கஜ் 14 (15.01.2006) ஞாயிற்றுக்கிழமை இதழ் 107




# ஊர்காவற்துறையில் கிளைமோர்; கடற்படையினர் இருவர் உயிரிழப்பு!

## மேலும் இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம்

ஊர்காவற்துறை - புளியங்கூடலில் ரோந்து சென்ற கடற்படையினர் மீது நேற்றுப் பிற்பகல் நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் இரு படையினர் பலியானதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.


நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -புளியங்கூடல் சுருவில் வீதியில் சைக்கிளில் ரோந்து சென்ற கடற்படையினர் மீது கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்தத் தாக்குதலில் இரண்டு கடற்படையினர் அந்த இடத்திலேயே உயிரிழந்ததுடன் மேலும் இருவர் படுகாயமடைந்து மேலதிக சிகிச்சைக்காக பலாலி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க ராஜாங்க அதிகாரி அடுத்த வாரம் வருகின்றார்!

கொழும்பு



இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமைகள் மற்றும் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் ஏற்பட்டுள்ள தடங்கல்கள் குறித்து ஆராய்வதற்காக அமெரிக்க ராஜாங்க திணைக்களத்தின் மூன்றாம் நிலை அதிகாரி நிக்கலஸ் பேன் இலங்கை வரவுள்ளார்.

நோர்வேயின் அபிவிருத்தி அமைச்சரும் இலங்கை சமாதான முயற்சிகளுக்கான விசேட தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம் எதிர்வரும் 23 ஆம் திகதி இலங்கை வரவுள்ள காலப் பகுதியிலேயே நிக்கலஸ் பேன் இலங்கை வரவுள்ளார்.

இலங்கை விஜயத்துக்கு முன்னர் எதிர்வரும் 22 ஆம் திகதி புதுடெல்கி செல்லும் பேன் - இலங்கை நிலைமை தொடர்பாக இந்திய அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளார்.

இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில் ஜனாதிபதி மகிந்த, பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, எதிர்க் கட்சித் (12 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் கண்டனம்!

கிளிநொச்சி

மட்டக்களப்பிலுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகம் மீது கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலை தமிழீழ விடுதலைப் புலிகள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

இது தொடர்பாக அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்டுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் -

கண்காணிப்புக் குழு அலுவலகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதில் யாரும் காயமடையவில்லை யென்பதை அறிந்து நாம் மிகவும் ஆறுதலடை

தலை நாம் வன்மையாகக்கண்டிக்கிறோம்.

இந்தத் தாக்குதல் இராணுவத்தினரின் உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் இடம்பெற்றுள்ளதை நாம் உங்கள் கவனத்துக்கு கொண்டு வருகின்றோம். கண்காணிப்புக்குழு அலுவலகத்துக்கு அருகில் இராணுவ முகாம்கள் உள்ளதுடன், ஒட்டுக்குழுக்களும் இவற்றில் தங்கியுள்ளன.

போர்நிறுத்தத்தைச் சிதைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாகவே இதனை எமது தலைமைப்பீடம் கருதுகின்றது. போர்நிறுத்தத்தைத் தொடர்ந்து அமுல்படுத்துவதற்கு

## மட்டக்களப்பில் இருந்து விலக கண்காணிப்புக்குழு யோசனை!



கொழும்பு


மட்டக்களப்பு மாவட்டத்தில் கண்காணிப்புப் பணிகளிலிருந்து விலகிக்கொள்வது தொடர்பாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஆராய்ந்துவருவதாகத் தெரியவருகிறது.

நேற்று அதிகாலை 12.30 மணியளவில் மட்டக்களப்பில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்துக்குள் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலையடுத்தே தாம் இதுபற்றி ஆராய்ந்துவருவதாக கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலின்ஸ் ஒலைஸ்டோரயர் தெரிவித்தார்.

ரப் ஹொக்லண்டுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் -

கண்காணிப்புக் குழு அலுவலகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதில் யாரும் காயமடையவில்லை யென்பதை அறிந்து நாம் மிகவும் ஆறுதலடைகிறோம். ஆயுதம் தரிக்காத கண்காணிப்பாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்கு

போர்நிறுத்தத்தைச் சிதைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாகவே இதனை எமது தலைமைப் பீடம் கருதுகின்றது. போர்நிறுத்தத்தைத் தொடர்ந்து அமுல்படுத்துவதற்கு எமது தலைமைப்பீடம் தொடர்ந்தும் தனது ஆதரவை வெளிப்படுத்தி வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




களப்பில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்துக்குள் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலையடுத்தே தாம் இதுபற்றி ஆராய்ந்துவருவதாக கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலின்ஸ் ஒலெஸ்டோரயர் தெரிவித்தார்.

கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகளை இலக்குவைத்து நேரடியாகத் தாக்குதல் நடத்தப்பட்ட முதலாவது சம்பவம் இதுவாகும். (12 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் கிரனேட் வீச்சு; நான்கு பேருக்கு படுகாயம்!





## சிங்கள இளைஞர்கள் கைவரிசை

திருகோணமலை —

திருகோணமலை - காந்திநகரில் வீடொன்றின் மீது நேற்று நடத்தப்பட்ட தாக்குதலில் நான்கு தமிழ்மக்கள் படுகாயமடைந்தனர்.

நேற்றுமாலை 3.20 மணியளவில் கண்டி வீதியிலுள்ள அனுராதபுரச் சந்திக்கு அண்மையிலுள்ள காந்திநகரிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

திருகோணமலை நகரசபை ஆயுள்வேத வைத்தியசாலையின் சுகாதார அதிகாரி இராஜேஸ்வரி ராஜேந்திரகுமார் (வயது 35) மற்றும் அவரது கணவரான ராஜேந்திரகுமார் (வயது 39), இவர்களது பிள்ளைகளான 10 வயதுடைய சிறுவன், 5 வயதுடைய சிறுமி ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

இதில் ராஜேந்திரகுமார் மற்றும் அவரது 10 வயதுடைய மகன் ஆகியோருக்கு அவசர சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டபோதும் அவர்களது நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

காந்திநகர் உள் ஒழுங்கை ஒன்றின் ஊடாக மோட்டார் சைக்கிளில் வந்த சிங்கள இளைஞர்கள் இருவரே இந்தக் கைக்குண்டுத் தாக்குதலை நடத்தியதாக சம்பவத்தை நேரில் கண்ட இளையதம்பி என்ற முதியவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கண்காணிப்புக்குழு (12 ஆம் பக்கம் பார்க்க)

# அம்பாறையில் தாக்குதலா? விடுதலைப் புலிகள் நிராகரிப்பு

அம்பாறை —

அம்பாறை - கஞ்சிகுடிச்சாறில் கருணா குழு நடத்திய தாக்குதலில் 6 புலிகள் கொல்லப்பட்டதாக இலங்கை ஊடகங்கள் வெளியிட்ட செய்தியை அம்பாறை மாவட்ட அரசியற்துறை மறுத்துள்ளது.

இது தொடர்பாக அம்பாறை மாவட்ட அரசியற்துறை வெளியிட்ட அறிக்கையில் -

இராணுவத்தினரும், அவர்களுடன் சேர்ந்தியங்கும் தேச விரோதச் சக்திகளும் தமிழ் மக்களை திசை திருப்பும் வகையில் பல தரப்பட்ட பொய்யான வதந்திகளைப் பரப்பி மக்களைத் துன்புறுத்திக் கொண்டிருக்கின்றனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் தாக்குதல் இரு புலிகள் வீரச்சாவு!

திருகோணமலை —

13.01.2005 அன்று திருமலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான தியாவனம் பிரதேசத்துக்குள் ஊடுருவிய படையினர் விடுதலைப் புலிகளின் முகாம் முன்னரங்கப் பகுதிகள் மீது தாக்குதல் மேற்கொண்டனர்.

இதையடுத்து விடுதலைப் புலிகளால் முறியடிப்புத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதன் பின்னர் தாக்குதலுக்கு வந்த ஐம்பதுக்கு மேற்பட்ட இராணுவத்தினரும் பின்வாங்கிச் சென்றனர். இத் தாக்குதலில் இரு பேராளிகள் வீரச்சாவடைந்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

APC ஆனந்தா பிறைவேற் கிளினிக்

எமது சேவைகள் 1. ஓ.பி.டி [O.P.D] 2. ஆய்வுகூடம் 4. கிளினிக் 5. பார்மசி 5. உடற்பயிற்சி [நோயாளிகளுக்கு]

(C/4385) 173, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021-222 8144

ஆலோசனை நேரம்:
(திங்கள் முதல் சனி) காலை 6.00 முதல் இரவு 9.00 வரை
ஞாயிறு காலை 6.00 முதல் காலை 10.00 வரை
ஞாயிறு மாலை 5.00 முதல் இரவு 9.00 வரை



# கிளிநொச்சியில் நடைபெற்ற தைப்பொங்கல் விழா








கிளிநொச்சியில் தைத்திருநாள் பொங்கல் திருவிழா மிகுந்த எழுச்சியுடன் இடம் பெற்றது.

கிளிநொச்சி மத்திய மைதானத்தில் நேற்று நண்பகல் 12.00 மணிளவில் ஆரம்பித்த இந்நிகழ்வில் முதன்மைச் சுடரை தமிழீழ விடுதலைப்புலிகளின் தளபதிகளில் ஒருவரான கேணல் ரமேஸ், கரைச்சிப் பிரதேச சபையின் விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ அரசியற்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து பொங்கல் நிகழ்வுகள் இடம் பெற்றன.

பிற்பகல்2.00 மணியளவில் கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியில் இருந்து ஆரம்பித்த பண்பாட்டு அணிவகுப்பு கிளிநொச்சி மத்திய மைதானத்தை வந்தடைந்தது.தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் இடம் பெற்றன.

# படைப்பயிற்சிக் கல்லூரியில் பொங்கல் விழா







விசேட படைப் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற மாபெரும் தைத்திருநாள் விழா.

உழவர் திருநாளாம் தைத்திருநாளை முன்னிட்டு நேற்றுக்காலை பல படைகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான போராளிகள் ஒன்றுகூடி மாதிரியாக வடிவமைக்கப்பட்ட தமிழீழத்தின் மாவட்டங்கள், பிரதேசங்களில் பல பொங்கல் பானைகளை வைத்து பொங்கி தமிழீழத்தின் தலைநகரான திருகோணமலையில் ஏற்றப்பட்ட தேசியக்கொடி யின் முன் னால் பொங்கலைப்படைத்து தைத்திருநாளை மகிழ்ச்சிகரமாக கொண்டாடினார்கள்.

இந்நிகழ்வு சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியைச்சேர்ந்த மித்திரன் தலைமையில் பொங்கல் நிகழ்வு நடைபெற்றது. முதலில் தேசியக் கொடியை படைப்பயிற்சி ஆசிரியர்களின் ஒருங்கிணைப்பாளர் லெப்.கேணல் வீரப்பன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து அக வணக்கம், உறுதியுரை இடம் பெற்றன. இதனைத் தொடர்ந்து சாள்ஸ் அன்ரனி விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாலவன் சிறப்புரையை நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து வங்கக் கடலில் காவியமான கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் 13 ஆம் ஆண்டு நினைவாக படையணிகளுக்கிடையே விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

# உண்மை நிலைமைகள் வெளியாவதைத் தடுக்கவே ஊடகவியலாளர்களைப் படையினர் தாக்குகின்றனர்

## கஜேந்திரன் எம்.பி.குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம் —

யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினர் திட்டமிட்டு நடத்திவருகின்ற கைதுகள், கொலைகள், பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுச் சம்பவங்களின் உண்மை நிலைகளை சர்வதேச சமூகத்தினருக்கு வெளிப்படுத்துவதை தடுப்பதற்கே ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்களை நடத்திவருகின்றனர்.

இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 4 வருடங்களாக நடைமுறையில் இருக்கும் போர்நிறுத்த உடன்படிக்கை செயலிழந்து, உடன்படிக்கை நடைமுறையில் இருக்கின்றதா என்று அதனைக் கண்காணிப்பவர்களே கேள்வி எழுப்புகின்ற நிலையே உருவாகியுள்ளது. இவ்வாறான நிலை ஏற்படுவதற்கு சிங்கள அரசும், சிங்கள இராணுவமுமே முழுக்காரணமாகும். கடந்த ஒன்றரை மாதகாலப்பகுதியில் யாழ்.குடாநாட்டில் மாத்திரம் நாற்பதுக்கும் அதிகமான அப்பாவிப்பொது மக்கள் படையினராலும், அவர்களுடன் இணைந்து செயற்படும் துணை ஆயுதக்குழுக்களினாலும் கொடூரமாகக் கொல்லப்பட்டுள்ளனர்.

நூற்றுக்கும் மேற்பட்டோர் சுடப்பட்டும் அடித்துக்காயப்படுத்தப்பட்டும் உள்ளனர். முப்பதிற்கும் அதிகமானோர் படையினராலும், துணை ஆயுதக்குழுக்களினாலும் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். புங்குடுதீவில் தர்சினி கொடூரமாக பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்ட பின்னரும், படையினர் பல பெண்கள் மீது பாலியல் வல்லுறவு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். வீதிகளில் சென்றுவரும் அப்பாவி மக்களை கண்மூடித்தனமாக தாக்குகின்றனர்.

கடந்த காலங்களில் இராணுவ வன்முறைகளுக்கு எதிராக குரல் கொடுத்தவர்களை தேடித்தேடி பழி வாங்கிப் படுகொலை செய்து வருகின்றனர். இவ்வளவு அட்டூழியங்களையும் வெளிப்படுத்த முயன்ற, முயல்கின்ற குடாநாட்டு பத்திரிகையாளர்கள், ஊடக வியலாளர்கள், படப்பிடிப்பாளர்களையெல்லாம் காட்டுமிராண்டித்தனமாக தாக்கி உண்மைகளை உலகுக்கு தெரியவிடாமல் மறைத்து வருவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# கைது செய்யப்படுவோர் குறித்து உடன் தகவல்களை வழங்கவும்

யாழ்ப்பாணம் —

யாழ்.குடாநாட்டில் காணாமற் போனோர், மற்றும் இராணுவத்தினரால் கைது செய்யப்படும் நபர்கள் பற்றிய தகவல்களை உடனுக்குடன் தமக்குத் தெரியப்படுத்துமாறு தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் கோரியுள்ளார்.

அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டில் இராணுவத்தினரும், அவர்களுடன் இணைந்து செயற்படும் தேசவிரோதக் கும்பல்களும் அப்பாவி இளைஞர்களைக் கைது செய்வதிலும், இளைஞர், யுவதிகளைக் கடத்தியும், படுகொலை செய்தும் வருகின்றனர். அத்தோடு இளம் பெண்களைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தும் முயற்சிகளிலும் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறான சம்பவங்களை உடனுக்குடன் வெளி உலகத்துக்கு தெரியப்படுத்தவும் மக்கள் மீதான கைதுகள், சித்திரவதைகள், கொலைகள் மற்றும் பாலியல் வல்லுறவு என்பவற்றை நிறுத்துவதற்கும், இல்லாது குறைப்பதற்கும், காணாமற்போனவர்களை மீட்கும் முயற்சிகளை மேற்கொள்வதற்கு உதவியாக பொதுமக்கள் இராணுவத்தினரால் கைதுசெய்யப்படும் போதும், தாக்கப்படும் போதும், படையினர், தேச விரோத கும்பல்களால் கடத்திச் செல்லப்படும் போதும் உடனடியாக தகவல்களை வழங்குமாறு கோரியுள்ளார்.

0212223942, 0212223744, 0773024316 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு தெரியப்படுத்த முடியும் எனத் தெரிவித்தார்.

# பட்டிப் பொங்கல்

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் சத்திரம் ஞான வைரவர் ஆலயத்தில் பட்டிப் பொங்கலும் கோ பூசையும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பசுக்கள், இடபங்கள் பாதுகாப்பு இணையத்தலைவர் செல்லத்துரை தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வின் நாட்டில் அமைதி வேண்டி பிரார்த்தனையும் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# பேசாலை வைத்தியசாலைப் பகுதியில் கிளைமோரை இயக்கும் கருவி மீட்பு

## - வைத்தியசாலையில் பதற்றம் -

மன்னார் - பேசாலை வைத்திய சாலைப் பகுதில் கிளைமோர்க் குண்டு வெடிக்க வைக்கும் கருவி கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை 8.45மணியளவில் பேசாலை வைத்தியசாலைப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான பொருட்களை வைத்தியசாலை ஊழியர் ஒருவர் கண்டுள்ளார். இதனை அடுத்து வைத்திய சாலையில் பதற்றம் நிலவியது. இதன் பின்னர் வைத்தியசாலை நிர்வாகத்தினரால் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

நண்பகல் பொலிஸார் கடற்படையினருடன் அந்த இடத்தை சுற்றி வளைத்து தேடுதல் நடத்தியதுடன் அங்கு காணப்பட்ட கிளைமோர் வெடிக்கவைக்கும் கருவிகளை எடுத்துச்சென்றனர். எடுக்கப்பட்ட கருவி கிளைமோர் வெடிக்க வைக்கும் கருவி என்பது தெரிய வந்ததை அடுத்து அங்கு நிலவிய பதற்ற நிலை தணிந்தது.

நிறைஞ்சனாஸ் சங்கானை
ரசிகர்கள் அனைவருக்கும் எமது தைத்திருநாள் வாழ்த்துக்கள்
அர்ஜுன், நமீதா, வடிவேல் நடித்த ஆணை
காட்சிகள் 10.00,1.00,4.00,7.00 (பு.நே)

நாகம்ஸ் சுன்னாகம்
ரசிகர்கள் அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்
பொங்கல் அதிரடி வெளியீடு
விஷால், மீரா ஜெஸ்மின் மற்றும் பலர் நடிப்பில்
சண்டக்கோழி
காட்சிகள்:- காலை 10.30, 2.30,5.30 (பு.நே)

நாதஜ்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
எமது மகத்தான பொங்கல் வெளியீடு!
அல்டிமேட் ஸ்ரார் அஜித், லைலா மற்றும் பலர் நடித்த
பரமசிவன்
இயக்கம்: பி.வாசு
காட்சிகள்;- 10.30, 2.00, 5.15, 8.15, (புதிய நேரம்)

மனோகரா யாழ்ப்பாணம்
ரசிகர்கள் அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்
இளைய தளபதி விஜய்,திரிஷா (வருகிறான் வரிப்புலி நாதியாய்) மற்றும் பலர் நடிப்பில்
ஆதி
இயக்கம் ரமணா
தயாரிப்பு - S.A சந்திரசேகர் இசை -வித்தியாசாகர்
(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு)
காட்சிகள்;- 10.30, 1.30, 4.30, 7.30, (புதிய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்
சிம்பு ஜோதிகா பிரகாஸ்ராஜ் நடித்த
சரவணா
இயக்கம்: கே.எஸ்.ரவிக்குமார்.
காட்சி : பு.நே. 9.30, 12.30, 3.30
காட்சி நேரம் மாற்றப்பட்டுள்ளது.
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

# ஆட்லறி, மோட்டார் பயிற்சியில் புலிகள்!

## படைத்தரப்பு கூறுகிறது

கொழும்பு —

தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் ஆட்லறி மற்றும் மோட்டார் பயிற்சிகளை மேற்கொண்டு வருவதாக படைத்தரப்புத் தெரிவித்தது.

வவுனியாவிலுள்ள படையினரின் ஓமந்தை முன்னரங்க நிலைகளுக்கு அண்மையாகவுள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் - கடந்த 11 ஆம் திகதி அதிகாலை முதல் இரவு 8 மணி வரை ஆட்லறி மற்றும் மோட்டார் ஷெல் சத்தங்கள் கேட்டன.

நாகர்கோவில் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகளிலிருந்து மூன்று கிலோமீற்றர் தூரத்தில் ஆட்லறி மற்றும் மோட்டார் ஷெல் சத்தங்கள் கேட்டதாகவும், இது புலிகள் பயிற்சிகளில் ஈடுபடுவதை உறுதிப்படுத்துவதாக நாகர்கோவில் இராணுவ முகாம் சிப்பாய்கள் தெரிவித்துள்ளனர். (தே)

# மகிந்தவின் பெயரில் போலிக்கடிதம்

# சிறைச்சாலை ஊழியரொருவர் கைது

கொழும்பு —

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பெயரில் போலிக் கடிதமொன்றை சிறைச்சாலைத் தலைமையகத்துக்கு எடுத்துச் சென்று மீண்டும் சேவையில் ஈடுபடுத்துமாறு கோரிய ஊழியர் ஒருவரை சிறைச்சாலை ஆணையாளரின் அறையில் வைத்து நேற்று முன்தினம் இரகசியப் பொலிஸார் கைதுசெய்தனர்.

கொழும்பு திம்பிரிகஸ்யாய பிரதேசத்தைச் சேர்ந்த இவர், வெலிக்கடை சிறைச்சாலையில் பணியாற்றி வந்த காலகட்டத்தில் சிறைக்கூடங்களுக்கு போதைப் பொருட்களை வழங்கிய குற்றச்சாட்டு காரணமாகப் பல மாதங்களுக்கு முன்னர் சிறைச்சாலை ஆணையாளர் ரூமி மர்ஸுக்கினால் பணி நீக்கம் செய்யப்பட்டார்.

பின்னர் இவரது கல்வித் தகைமை குறித்து சிறைச்சாலை ஆணையாளர், பரீட்சைகள் ஆணையாளரிடம் வினவிய போது, சிறைச்சாலை ஊழியர் பதவிக்கான தகுதியை அவர் கொண்டிருக்கவில்லை என தெரியவந்தது.

அதன்படி சிறைச்சாலை ஊழியர் பதவியிலிருந்தும் அவரது சேவையிலிருந்தும் அவரை நீக்குவதற்கு சிறைச்சாலை ஆணையாளர் நடவடிக்கை எடுத்திருந்தார்.

பின்னர் இந்த சிறைச்சாலை ஊழியர் அமைச்சர்களினதும், நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் கடிதங்களை எடுத்து வந்து அச்சுறுத்தல் விடுத்து தனது சேவையை மீளப்பெற முயன்றபோதிலும் சிறைச்சாலை ஆணையாளர் அவரை மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளவில்லை.

இதன் பின்னர் இந்த நபர் ஜனாதிபதியின் கடிதத்துடன் வருவதாகச் சிறைச்சாலை ஆணையாளருக்கு அச்சுறுத்தல் விடுத்துச் சென்றுள்ளார்.

அதன்படி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கடிதமொன்றை சந்தேக நபர் நேற்று முன்தினம் காலை சிறைச்சாலை ஆணையாளரிடம் கையளித்தார்.

தகுதிபற்றி ஆராயாது அவரை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துமாறு ஜனாதிபதியின் அந்தக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இது குறித்துச் சிறைச்சாலை ஆணையாளர் ஜனாதிபதியிடம் வினவிய போதுதான் அவ்வாறானதொரு கடிதத்தைக் கொடுக்கவில்லை என்று தெரியவந்தது.

இந்தக் கடிதம் குறித்து ஜனாதிபதி - பொலிஸ் மா அதிபருக்கும், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கும் அறிவித்தார்.

உடனடியாகச் செயற்பட்ட குற்றப்புலனாய்வுத் துறையினர் சிறைச்சாலை ஆணையாளர் ரூமி மர்ஸுக்கின் உத்தியோகபூர்வ அறையிலிருந்து சந்தேக நபரை கைதுசெய்தனர்

# ஹெலி வசதி இழுபறியால் பாலா வருகை சந்தேகம்!

## கொழும்புத் தகவல்கள் தெரிவிப்பு

கொழும்பு —

இலங்கை அரசு விமானப் பயண வசதி வழங்குமா என்பதில் சந்தேகம் நிலவுவதால், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் இலங்கைக்கான பயணம் உறுதியற்றிருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

எதிர்வரும் 23 ஆம் திகதி கொழும்பு வரவுள்ள நோர்வேயின் அபிவிருத்தி அமைச்சரும், விசேட தூதுவருமான எரிக் சொல்ஹெய்மை - விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் சந்தித்து நடத்தும் பேச்சுக்களில் அன்ரன் பாலசிங்கமும் பங்குபற்றவுள்ளதாகக் கொழும்பில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும், அன்ரன் பாலசிங்கம் கொழும்பிலிருந்து கிளிநொச்சி செல்வதற்கு ஹெலிகொப்டர் வசதியை வழங்க அரசாங்கம் பின்னடித்துள்ளதால், அவரது பயணம் சந்தேகத்துக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், அரசாங்கத்தின் எந்தவொரு ஹெலிகொப்டரும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் பறப்பை மேற்கொள்ளவில்லை. ரோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் கிளிநொச்சிக்கு வந்திருந்தபோதும், அவர்களுக்கான ஹெலி வசதி வவுனியாவரையுமே வழங்கப்பட்டிருந்தது.

கடந்த மாதம் அம்பாறை - அறுகம்பை பகுதியில் பறப்பை மேற்கொண்டிருந்த ஹெலி மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து, விமானப் பயணங்கள் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு மட்டுப் படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க சமாதான செயலகத்தின் பேச்சாளர் தயாமினி சேரசிங்க தெரிவித்தார்.

கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் இலங்கைப் பயணம் தொடர்பாக அரசாங்கம் தனது சமாதான செயலகத்துக்கு இதுவரை எவ்வித அறிவித்தலையும் வழங்கவில்லையெனவும் அவர் தெரிவித்தார். (தே)

# இரசாயன பாடப் பெறுபேறு நாளை கையளிப்பு!

கொழும்பு —

மீண்டும் மீளாய்வு செய்யப்பட்ட க.பொ.த உயர்தரப் பரீட்சையின் விஞ்ஞான பாடத்துக்கான பெறுபேறுகள் நாளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்படுமென கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்தார்.

கணினியில் ஏற்பட்ட குழறுபடிகளை அடுத்து - கடந்த வருடம் மே மாதம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையின் இரசாயன விஞ்ஞான பாட பகுதி 1 இன் விடைத்தாள்களை மீளவும் மீளாய்வு செய்ய பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்திருந்து.

இதனையடுத்து விஞ்ஞான பாடத்தின் விடைத்தாள்களை மறுமதிப்பீடு செய்வதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க நடவடிக்கை எடுத்தார்.

மறுமதிப்பீடு செய்யப்பட்ட விஞ்ஞான பாடத்தின் பெறுபேறுகளே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் நாளை கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திருமலையிலிருந்து ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்வு

திருகோணமலை —

திருகோணமலையிலிருந்து விடுதலைப்புலிகளின் பகுதிக்குச் சுமார் ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருமலை மகிந்தபுர சோதனைச் சாவடியூடாக இவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து வெளியேறியுள்ளனர். கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஹெலன் ஓலப்ஸ் டொட்ரெயர் கூறுகையில்-

மூதூர் பகுதியிலிருந்து சுமார் ஆயிரம் குடும்பங்கள் வெளியேறி, அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள கிளிவெட்டி பாடசாலைகளில் தங்கியுள்ளனர்.

மேலும் மகிந்தபுரம் சோதனைச் சாவடியூடாக விடுதலைப் புலிகளின் பகுதிக்கும் அவர்கள் சென்றுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# செங்கல் சூளை தொழிலாளி அம்பாறையில் சுட்டுக்கொலை!

அம்பாறை —

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறையில் நேற்று முன்தினம் காலை 7.15மணியளவில் செங்கல் சூளையில் தொழில் புரியும் 33 வயது மதிக்கத்தக்க தொழிலாளி ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்டவர் சுலைமான் லெப்பை மொஹமட் இஸ்மாயில் என அடையாளம் காணப்பட்டார்.

நயினாக்காட்டிலுள்ள செங்கல் சூளையில் உறக்கத்திலிருந்த சமயம் அங்கு வந்த துப்பாக்கி நபர்களினால் இவர் சுட்டுக் கொல்லப்பட்டதாக சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

தனிப்பட்ட தகராறே இந்தக் கொலைக்குக் காரணமாக இருக்கலாம் அல்லது முஸ்லிம் ஆயுதக் குழுக்களுடன் தொடர்புடையதாக இருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர்.

இந்த நபர் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# வட அயர்லாந்து பிரதிநிதி அடுத்தவாரம் வருகிறார்

## சமாதான முயற்சி குறித்து ஆராய்வார்

கொழும்பு —

ஐ.ஆர்.ஏ.அமைப்பின் சார்பாக வட அயர்லாந்து சமாதானப் பேச்சுவார்த்தையில் பிரதான பங்கை வகித்த மார்ட்டின் மைக்கென்னஸ் அடுத்தவாரம் இலங்கை வரவுள்ளார்.

இவர் ஜனாதிபதி ராஜபக்ஷ, அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து ஐரிஸ் சமாதான முயற்சியில் எவ்வாறான முறை பயன்படுத்தப் பட்டதென்பது தொடர்பான ஆலோசனையை வழங்கவுள்ளார்.

பேச்சுவார்த்தை மூலம் சமாதான வழிமுறைகளை அடைவது குறித்து ஒவ்வொருவருக்கும் மனதில் பதியும்படி செய்ய முடியுமென தாம் நம்புவதாக மார்ட்டின்- ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

எனது விஜயத்தின்போது சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வது தொடர்பான ஊக்குவிப்பை வழங்கவுள்ளேன். சமாதான முயற்சிகள் தொடர்பாகச் சாதகமான சூழல் ஏற்படுத்தப்படுவதுடன், அதை நோக்கித் தலைவர்கள் சிந்திப்பதுடன் இலங்கை மக்களிடையே காலப்போக்கில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பவேண்டுமென வற்புறுத்திக் கூறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# ராசிக் குழு முன்னாள் உறுப்பினர் மட்டக்களப்பில் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பில் ஈ.பி.ஆர்.எல்.எவ். முன்னாள் உறுப்பினர் ஒருவர் நேற்றுமுன்தினம் காலை இனந் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பு - கல்முனை வீதியில் கல்லடி ட்ரான்ஸ்போமர் சந்தியில் நேற்றுமுன்தினம் காலை 10.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் முன்னாள் ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினரான சின்னன் என அழைக்கப்படும் அருளம்பலம் சுந்தரலிங்கம் (வயது 36) என்பவரே இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

முன்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பிலிருந்த இவர் அதிலிருந்து விலகி, சிறிதுகாலம் இராணுவத்தின் துணைப்படையான ராசிக்குழுவில் இயங்கிவந்தார்.

கல்லடி நெசவு நிலையத்திலுள்ள சுனாமி அகதிமுகாமில் தனது குடும்பத்துடன் வாழ்ந்து வந்த இவர், சைக்கிளில் மீன் வாங்குவதற்குச் சென்றபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

# தாக்குதல் அச்சம் காரணமாக பொலிஸ் நிலையங்கள் உசார்!

கொழும்பு —

கொழும்பு நகரிலுள்ள பொலிஸ் நிலையமொன்றின் மீது தாக்குதல் நடத்துவதற்கான திட்டம் பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளமையினால், எந்தவொரு தாக்குதலுக்கும் முகம் கொடுக்கும் வகையில் அனைத்துப் பொலிஸ் நிலையங்களும் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இது தவிர ஏதெனுமொரு தாக்குதல் மேற்கொள்ளப்படுமானால், அதற்கு முகம் கொடுப்பதற்காக விசேட பயிற்சி பெற்ற 150 பொலிஸாரைக் கொண்ட குழுவொன்று கொழும்பு நகரின் பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

கொழும்பின் பாதுகாப்புக்காக எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகக் கொழும்பு மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் நடத்தப்பட வாய்ப்புள்ளதாக இரகசிய தகவல் பிரிவின் மூலம் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இதனால் கொழும்பு நகரில் தேடுதல் நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகத்துக்கிடமான வாகனங்களை சோதனையிடுவதற்கான வீதித்தடைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் ஜே.வி.பி எம்.பி சிங்களவர்களால் தாக்கப்பட்டார்

திருகோணமலை —

ஜே.வி.பி யின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த விஜயசேகர சிங்களக் காடையர்களினால் தாக்கப்பட்டார். இவர் சென்ற வாகனமும் அடித்து சேதப்படுத்தப்பட்டது.

கடந்த சில தினங்களாக ஹர்த்தால் அனுஷ்டித்துவந்த சிங்கள மக்களை நேற்றுமுன்தினம் மாலையுடன் நிறுத்துமாறு திருகோணமலை நகரில் இவர் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தார். இதன் பின்னர் அபயபுர பகுதிக்குப் பிரசாரத்துக்காக சென்று கொண்டிருந்தவேளை இவரது வானை வழிமறித்த சிங்களக் காடையர் குழுவினர் கடுமையாகத் தாக்கியதுடன் இவர் சென்ற வாகனத்தையும் அடித்துச் சேதப்படுத்தினர். காயமடைந்த இவர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

கிழக்கு சிங்கள அமைப்பு ஏற்பாடு செய்திருந்த மூன்று நாள் ஹர்த்தாலை இரண்டாவது நாளுடன் குழப்புவதற்கு முயற்சித்த காரணத்தினாலேயே இவர் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (10,04)

# பாகிஸ்தான் முதல் இனிங்ஸில் 679 ஓட்டங்களைக் குவித்தது



லாகூர்

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் லாகூர் - கடாபி மைதானத்தில் இடம்பெற்றுவரும் முதலாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று பாகிஸ்தான் அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 679 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

நேற்றுமுன்தினம் ஆட்டநேரமுடிவில் 2 விக்கெட்டை இழந்து 326 ஓட்டங்கள் என்ற நிலையிலிருந்த பாகிஸ்தான் அணி நேற்றும் தொடர்ந்து ஆடியது. இதில் யுனுஸ்கான் 147, மொகமட் யூசுப் 95 ஓட்டங்களுடன் தமது ஆட்டத்தைத் தொடர்ந்தனர்.

இந்த ஜோடி நேற்றும் தமது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால், இந்திய பந்துவீச்சாளர்கள் இவர்களைப் பிரிப்பதில் பெரும் சிரமப்பட்டனர். இதில் சிறப்பாக ஆடிய மொகமட் யூசுப் சதமடித்தார். எனினும், அணி 455 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் - 199 பந்துகளில் 21 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 173 ஓட்டங்களைப் பெற்றிருந்த அவர், கும்ளேயின் பந்தில் டோனியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க, அணித்தலைவர் இன்சமாம் களமிறங்கினார்.

ஆனால், அணி மேலதிகமாக ஒரு ஓட்டத்தை மட்டும் பெற்றிருக்கையில் - 7 பந்துகளைச் சந்தித்து ஒரு ஓட்டத்தைப் பெற்றிருந்த இன்சமாம், கும்ளேயின் பந்தில் எல்.பி.டபிள்யூ ஆகி வெளியேறினார்.

இதையடுத்து அதிரடி ஆட்டக்காரர் அப்ரிடி களமிறங்கினார். இவர் வந்த வேகத்திலேயே இந்தியப் பந்துகளை விளாசித் தள்ளினார். இதனால் பாகிஸ்தான் அணியின் ஓட்ட எண்ணிக்கை திடீரென அதிகரித்தது. இவர் ஒருநாள் போட்டிகள் போல ஆடி இந்தியப் பந்துகளை பவுண்டரிகளுக்கும், சிக்ஸர்களுக்கும் அனுப்பி



னார்.

இந்த நிலையில் மறுமுனையில் நின்ற யுனுஸ்கான் இரட்டைச் சதத்தைப் பூர்த்தி செய்வாரென எதிர்பார்க்கப்பட்ட நிலையில், கும்ளேயின் பந்தில் 2ஆவது ஓட்டத்தை எடுக்க முற்பட்டவேளை, ஹர்பஜன் சிங்கினால் ரன் அவுட்டாக்கப்பட்டார். இவர் 336 பந்துகளில் 26 பவுண்டரிகள் அடங்கலாக 199 ஓட்டங்களில் ஆட்டமிழந்ததனால், இரட்டைச் சதம் பெறும் வாய்ப்பையும் இழந்தார்.

இவரையடுத்து விக்கெட் காப்பா



ளர் கம்ரன் அக்மல், அப்ரிடியுடன் இணைந்தார். இவர்கள் இருவரும் இந்தியப் பந்துகளை விளாசித் தள்ளியதால், வேகமான சதங்களைப் பெற்றனர். இதில் அதிரடி வீரர் அப்ரிடி இந்திய சுழற்பந்தாளர் ஹர்பஜனின் ஒரு ஓவரில் 27 ஓட்டங்களைக் குவித்ததும் சிறப்பம்சமாகும்.

இந்த நிலையில் அணி 647 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் - 80 பந்துகளில் 7 பவுண்டரிகள், 7 சிக்ஸர்கள் அடங்கலாக 103 ஓட்டங்களைப் பெற்ற அப்ரிடி - அகர்கரின் பந்தில் ஹர்பஜனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து நவீட் உல்-ஹசன் களமிறங்கினார். எனினும், அணி 668 ஓட்டங்ளைப் பெற்றிருக்கையில், 13 பந்துகளில் 1 பவுண்டரி அடங்கலாக 9 ஓட்டங்களைப் பெற்றிருந்த அவர், அகர்கரின் பந்தில் கங்கூலியிடம் பிடிகொடுத்து வெளியேற, சமி வந்தார்.

இந்தநிலையில், அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 679 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ஆட்



டத்தை இடைநிறுத்துவதாக அணித்தலைவர் இன்சமாம் அறிவித்தார். இதில் 81 பந்துகளில் 11 பவுண்டரிகள்,



2 சிக்ஸர்கள் அடங்கலாக 102 ஓட்டங்களைப் பெற்றிருந்த கம்ரன் அக்மல், 1 ஓட்டத்தைப் பெற்றிருந்த சமி இருவரும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

இந்தியப் பந்துவீச்சாளர்கள் பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர்களுக்கு தமது பந்துவீச்சினால் ஓட்டங்களை வாரி வழங்கினர். இதில் அகர்கர் மற்றும் கும்ளே இருவரும் தலா 2, பதான் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து தனது முதலாவது இனிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி - போதிய வெளிச்சமின்மை காரணமாக நேற்றைய தினம் ஆட்டம் குறித்த நேரத்திற்கு முன்னரே நிறுத்தப்பட்ட நிலையில் விக்கெட் இழப்பின்றி 13 ஓவர்களில் 65 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் ஷேவாக் 36, ராவிட் 22 ஓட்டங்களுடன் களத்திலுள்ளனர்.

## போதைப் பொருள் பாவனை

# முன்னாள் தடகள பயிற்சியாளருக்கு சீனா ஆயுட்காலத் தடை விதிப்பு

பீஜிங்

சீனாவின் முன்னாள் தடகள போட்டி பயிற்சியாளர் லாங் தெக்சியான் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கையின் கீழ் வாழ்நாள் முழுவதும் விளையாடத் தடைவிதிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து சீன ஒலிம்பிக் சபையின் போதைப் பொருள் தடுப்புச் சபை அதிகாரிகள் கூறியதாவது -

சீனாவின் தடகள வீரர்களுக்கு பயிற்சியாளராக இருந்தவர் வாங் தெக்சியான். இவர் தன்னிடம் பயிற்சி பெற்ற இரண்டு ஓட்டப்பந்தய வீரர்களுக்கு போதைப் பொருள் கொடுத்ததாக குற்றம் சாட்டப்பட்டார்.

பயிற்சிபெற்ற வீரர்களில் ஒருவரான சன் இங்கிஜேயை பரிசோதனை செய்தபோது, போதைப் பொருள் உட்கொண்டமை நிரூபணமானதால் இரண்டு ஆண்டுகளுக்குத் தடைவிதிக்கப்பட்டார்.

கடந்த 1995ஆம் ஆண்டு ஓட்டப் பந்தய வீரர் ஜுவோசிங்மே என்பவருக்கு போதைப்பொருள் கொடுத்த குற்றத்திற்காகவும் பயிற்சியாளர் வாங் தெக்சியானுக்குத் தடைவிதிக்கப்பட்டது.

தற்போது வாங் தெக்சியானுக்கு வாழ்நாள் தடை விதிக்கப்பட்டுள்ளது. பயிற்சியாளர் வாங் தெக்சியான் மற்றும் ஓட்டப்பந்தய வீரர் ரன் இங்கிஜேக்கு 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்து சீன ஒலிம்பிக் போதைப்பொருள் தடுப்புச் சபை உத்தரவிட்டுள்ளது.

# அடுத்த உலகக் கிண்ணப் போட்டியுடன் முத்தையா முரளிதரன் ஓய்வுபெறுவார்?


சிட்னி

அடுத்த ஆண்டு நடைபெறும் உலகக் கிண்ணப் போட்டி முடிந்ததும் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற சிந்தித்து வருவதாக இலங்கை சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் (வயது 33) டெஸ்ட் போட்டியில் 584 விக்கெட்டுக்களை வீழ்த்தி 2ஆவது இடத்தில் இருக்கிறார். அவுஸ்ரேலிய வீரர் வோன் 659 விக்கெட்டுக்களை எடுத்து முதலிடத்தில் இருக்கிறார்.

அவுஸ்ரேலியாவில் நடைபெற்று வரும் முத்தரப்பு கிரிக்கெட் போட்டியில் ஆடிவரும் முரளிதரன் - சிட்னியில் அளித்த பேட்டியில் கூறியதாவது -

அடுத்த ஆண்டு (2007) மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவிருக்கும் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி வரை விளையாடுவேன். அதன் பின்பு தொடர்ந்து ஆடுவதா? அல்லது ஓய்வு பெறுவதா? என்பது குறித்து பரிசீலனை செய்து வருகிறேன்.



திருமணமான எனக்கு இன்னும் 10 நாட்களில் ஆண் குழந்தை பிறக்க இருக்கிறது. அதனை நான் ஆவலுடன் எதிர்நோக்கியிருக்கிறேன். கடந்த 16 ஆண்டுகளாக எனது கிரிக்கெட் ஆட்டத்தை அனுபவித்து ஆடி வருகிறேன். தற்போது எனது குடும்பத்தினருடன் நேரத்தைக் கழிக்க வேண்டியுள்ளது.

நான் சாதனை படைத்திருக்கிறேன். சாதனையில் ஒன்றும் இல்லை. அதனை ஒருநாள் யாராவது ஒருவர் தகர்க்கக்கூடும். இவ்வாறு முரளிதரன் கூறினார்.

## விளையாட்டு

# இந்தியத் தொடருக்கான இங்கிலாந்து அணி அறிவிப்பு

லண்டன்

இந்தியத் தொடருக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. காயத்திலிருந்து குணமடைந்த மைக்கல் வோண், ஆஸ்லே ஜைல்ஸ், கெவின் பீற்றர்சன் ஆகிய நட்சத்திர வீரர்கள் மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ளனர். இதனால் இங்கிலாந்து அணி முழுப் பலத்துடன் காணப்படுகிறது.

இந்தியாவுக்கு வரவுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி மூன்று டெஸ்ட், ஏழு ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. முதல் டெஸ்ட் நாக்பூரில் எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி தொடங்கவுள்ளது.

ஒருநாள் தொடர் டெல்கியில் மார்ச் 28ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இவ்விரு தொடர்களுக்கான இங்கிலாந்து அணி லண்டனில் நேற்று அறிவிக்கப்பட்டது. இதில் காயத்திலிருந்து மீண்டு வந்துள்ள கப்டன்



மைக்கல் வோண், பீற்றர்சன், ஜைல்ஸ், சைமன் ஜோன்ஸ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இல்லாததால் சமீபத்தில் நடந்த பாகிஸ்தான் தொடரில் டெஸ்ட் (0-2), ஒருநாள் தொடர் (2-3) ஆகிய இரண்டு கிண்ணங்களையும் இங்கிலாந்து அணி இழந்தது. இந்த வெறுப்பில் இருக்கும் இவர்கள் முழுப் பலத்துடன் இந்தியா வரவுள்ளனர்.

இதனால் தொடரில் கடும் போட்டி இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கிலாந்து வீரர்கள் எதிர்வரும் பெப்ரவரி 12ஆம்திகதி லண்டனிலிருந்து கிளம்புகின்றனர்.

டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து அணி -

மைக்கல் வோண் (கப்டன்), இயன் பெல், கொலிங்வூட், பிளின்ரொப், ஆஸ்லே ஜைல்ஸ், ஹர்மிசன், ஹொகாட், ஜெரைன்ட் ஜோன்ஸ், சைமன் ஜோன்ஸ், பீற்றர்சன், பிளங்கெற். மத்தியூ பிரியர், அன்ட்ரூ ஸ்ரரஸ், ட்ரஸ்கொதிக் மற்றும் ஷேன் உடல்.

ஒருநாள் போட்டிக்கான இங்கிலாந்து அணி -

வோண் (கப்டன்), கபீர் அலி, அன்டர்சன், இயன் பெல், இயன் பிளைக்வெல், ஹர்மிசன், கொலிங்வூட், பிளின்ரொப், ஜைல்ஸ், ஜெரைண்ட் ஜோன்ஸ், சைமன் ஜோன்ஸ், பீற்றர்சன், மத்தியூ பிரியர், பிளங்கெட், ஸ்ரரஸ் மற்றும் ட்ரஸ்கொதிக்.

# உலக ரெனிஸ் தரவரிசையில் சானியாவுக்குப் பின்னடைவு!



ஹம்பர்க்

உலக ரெனிஸ் ஒற்றையர் தரவரிசையில் இந்திய வீராங்கனை சானியா மிர்சா 34ஆவது இடத்துக்கு இறக்கம் கண்டுள்ளார்.

கடந்த ஆண்டு அவர் பல சாதனைகளைப் படைத்தார். இதன் மூலம் அவர் ரைம்ஸ் பத்திரிகையின் அட்டைப் படத்தில் இடம்பிடித்தார்.

இந்த ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ் போட்டி எதிர்வரும் 16ஆம் திகதி மெல்பேர்னில் தொடங்கவுள்ளது. இதில் ஆட இருக்கும் சானியா, சமீபத்தில் நடந்த சிட்னி ஓபன் சர்வதேச போட்டி, காட்சிப் போட்டி ஆகியவற்றின் முதல் சுற்றில் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

இந்த நிலையில் உலக ரெனிஸ் வீராங்கனைகளின் தரவரிசைப் பட்டியலை சர்வதேச ரெனிஸ் சங்கம் வெளியிட்டுள்ளது. அதில் 31ஆவது இடத்தில் இருந்த இந்திய வீராங்கனை சானியா மிர்சா 34ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

அமெரிக்க வீராங்கனை லிண்ட்சே டேவன்போர்ட் தொடர்ந்து முதலிடம் வகிக்கிறார். கிம் கிளைஸ்டர்ஸ் (பெல்ஜியம்) 2ஆவது இடமும், அமலி மௌரிஸ்மோ (பிரான்ஸ்) 3ஆவது இடத்தையும், மரியா ஷரபோவா (ரஷ்யா) 4ஆவது இடத்தையும், மேரி பியர்ஸ் (பிரான்ஸ்) 5ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

9ஆவது இடத்திலிருந்த நாதியா பெட்ரோவா (ரஷ்யா) 6ஆவது இடத்துக்கு முன்னேற்றம் கண்டிருக்கிறார். பட்டி ஷிண்டர் (சுவிற்சர்லாந்து) 7ஆவது இடமும், ஜஸ்ரின் ஹெனின் (பெல்ஜியம்) 6ஆவது இடத்திலிருந்து 8ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார். எலினா டெமன்ரீவா (ரஷ்யா) 9ஆவது இடத்தையும், அமெரிக்க வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் 10ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

# யாழ்.குடாநாட்டில் சோபை இழந்த தைப்பொங்கல் கொண்டாட்டங்கள்

யாழ்ப்பாணம் —

தமிழ் மக்களின் பெருநாட்களில் ஒன்றான தைத்திருநாள் நிகழ்வு நேற்று யாழ்.குடாநாட்டில் சோபை இழந்து காணப்பட்டது.

கடந்த காலங்களில் மிகவும் கோலாகலமாக இடம்பெற்ற இந்த நிகழ்வு, இம்முறை அமைதியான முறையில் இடம்பெற்றது.

பல்வேறு கலை நிகழ்வுகளும், ஆலயங்களில் பல்வேறு பண்பாட்டு நிகழ்வுகளுடனும் தைப் பொங்கல் கொண்டாடப்பட்டது. இம்முறை வீட்டுக்கு வீடு, தெருவுக்குத் தெரு என இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர்.

ஆள் கடத்தல்கள், துப்பாக்கிப் பிரயோகங்கள் மத்தியில் குடாநாட்டுத் தமிழர்கள் திண்டாடிக் கொண்டிருக்கும் நிலையில், இவ்வாறான களியாட்டங்களில் ஈடுபடுவதில மக்கள் அதிக அக்கறை செலுத்தவில்லை.

வீட்டை விட்டு வெளியில் புறப்படுபவர்கள் வீடு திரும்புவதே உறுதியற்ற நிலையில் வீட்டுக்குள்ளே முடங்கிக் கொள்வோம் என நினைத்துப் பொங்கல் திருநாளை குடாநாட்டு மக்கள் அமைதியான முறையில் கொண்டாடினர்.

# வடமராட்சிப் பகுதியில் வெள்ளை வான் பீதி!

வடமராட்சி —

தற்போது வடமராட்சியில் இளைஞர்கள் பலர் கடத்தப்படுவதும், கொலை மிரட்டல்கள் இடம்பெறுவதும் அதிகரித்து வருகிறது.

கண்ணிவெடி அகற்றும் இளைஞர்கள் இருவர் கடந்த வாரம் பருத்தித்துறையில் வைத்துக் கடத்தப்பட்டதை நேரில் கண்ட சிலர், கடத்தியவர்கள் வெள்ளைவானில் வந்ததாகவும், வானுக்குள்ளே இருக்கைகள் காணப்படவில்லையெனவும் தெரிவித்தனர்.

இதனால் இளைஞர், யுவதிகள் உட்பட அனைத்துப் பொது மக்களும் ஆள்நடமாட்டம் இல்லாத வீதிகளால் போக்குவரத்தை மேற்கொள்ளப் பெரும் அச்சமடைந்துள்ளதுடன், கரவெட்டிப் பகுதியில் இரவு 9.30 மணிக்கு பின்னர் வெள்ளை வான் ஒன்று உலாவுவதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (12)



வடக்கு-கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தைகள் திணைக்களத்தால் கோண்டாவிலில் அமைக்கப்பட்டுள்ள சிறுவர் நன்னடத்தைப் பாடசாலையை மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி நாடா வெட்டி திறந்து வைப்பதை படத்தில் காணலாம். அருகில் யாழ்.மாவட்ட சிறுவர் நன்னடத்தை அதிகாரி திருமதி சிவராஜாவும் காணப்படுகிறார். (111)

# நாடக பாடத்துக்கான அரங்க பயிற்சிகள்; பெறவிரும்புவோர் தொடர்பு கொள்ளவும்!

யாழ்ப்பாணம் —

நாடகத்தை ஒருபாடமாக பயிலும் மாணவர்களது நன்மை கருதி செயல்திறன் அரங்க இயக்கம் - அரங்க வள நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. இந்தப் பயிற்சி வள நிலையத்தில் நாடக அரங்கப் பயிற்சிகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சியானது க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான நாடக அரங்கப் பயிற்சி, க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான நாடக அரங்கப் பயிற்சி என இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

க.பொ.த சாதாரண மாணவர்களுக்கான நாடக அரங்கப் பயிற்சியை தொடர விரும்புபவர்கள் க.பொ.த சாதாரண தரத்தில் நாடகத்தை ஒரு பாடமாக பயிலுதல் வேண்டும்.

இதேபோன்று க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான நாடக அரங்கப் பயிற்சியை தொடர விரும்புபவர்கள் உயர்தரத்தில் நாடகத்தை ஒரு பாடமாக பயிலுதல் வேண்டும்.

இந்த இரு பயிற்சிகளும் பாடத்திட்டத்தின் செயல் முறைச் செயற்பாட்டின் அடிப்படையில் அமையும்.

பயிற்சிகள் சனி, ஞாயிறு தினங்களிலும், கிழமை நாட்களில் மாலை நேரத்திலும் அருளகம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள செயல்திறன் அரங்க அலுவலகத்தில் நடைபெறும்.

பயிற்சி பெற விரும்புபவர்கள் எதிர் வரும் 30ஆம் திகதிக்கு முன் செயல்திறன் அரங்க இயக்க நிறுவன அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும்.

# வீதிகளில் பாண் பெட்டிகளை கிளறித் துருவும் படையினர்!

யாழ்ப்பாணம் —

யாழ். குடாநாட்டில் காலை நேரத்தில் வீதிச் சோதனைக்கெனச் செல்லும் இராணுவத்தினர் - காலையில் கடைகளுக்குப் பாண் கொண்டுசெல்லும் பெட்டிகளை மறித்து, சோதனை செய்த பின்னரே தொடர்ந்து செல்ல அனுமதிக்கின்றனர்.

மிகவும் பாரத்துடன் சைக்கிள் ஓடிச்செல்லும் இவர்களை இராணுவத்தினர் நடுவீதியில் நிறுத்துவதால், அவர்கள் தட்டுத்தடுமாறி, கஸ்டப்பட்டு நிற்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

பாரத்துடன் வரும் இவர்கள் சைக்கிளை நிறுத்துவதற்குக் கூட இராணுவத்தினர் உதவ முன்வருவதில்லை. இதன் காரணமாகப் பாண் கொண்டு செல்பவர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாவதாக விசனம் தெரிவித்தனர்.

# பொலிஸாரின் வீதித் தடுப்புகளால் போக்குவரத்து சிரமம்!

இளவாலை —

இளவாலை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள வீதியில் வேகத்தடை போடப்பட்டிருப்பதால், அந்த வீதியின் ஊடாக போக்குவரத்துச் செய்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. தற்போது பொலிஸ் நிலையங்கள் மீது தாக்குதல்கள் இடம்பெற்றுவருவதையடுத்து, இளவாலை பொலிஸ் நிலையத்துக்கு அருகால் செல்லும் 4 வீதிகளில் பொலிஸார் தார் ஊற்றி வரம்புகளை அமைத்துள்ளனர். இதனால் அந்த வீதிகளால் செல்லும் வாகனங்கள் அனைத்தும் மெதுவாகவே பயணிக்க வேண்டியுள்ளது.

இந்தப் பகுதியில் வீதி செப்பனிடும் பணி இடம்பெற்று வருவதால், வீதி திருத்தும் தொழிலாளர்களைக் கொண்டு பொலிஸார் தார்மூலம் வரம்புகளை அமைத்துள்ளனர்.

# நல்லூர் பிரதேசத்துக்கென வரியிறுப்பாளர் சங்கம்!

யாழ்ப்பாணம் —

நல்லூர் பிரதேச சபையின் அபிவிருத்தி நோக்கம் கருதியும், அந்தப் பகுதி மக்களின் நன்மை கருதியும் வரியிறுப்பாளர் சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

கொக்குவில் கிழக்கு வளர்மதி சனசமூக நிலையத்தில் நல்லூர் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் பி.கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கொக்குவில், நல்லூர் கிராமசபைகளை உள்ளடக்கிய 28 வட்டாரங்களைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டனர்.

இந்தப் பிரதேசசபை பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைத் திட்டங்களை இனம் கண்டு செயற்படுத்துவது மற்றும் அந்தப் பகுதி மக்கள் மத்தியிலிருக்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்குடனேயே இந்தச் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் வரியிறுப்பாளர் சங்கத் தலைவராக பி.கனகசபாபதி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

28 வட்டாரங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 28 பேர் நிர்வாகசபை உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

# திருட்டு மணல் அகழ்வு வடமராட்சியில் அதிகரிப்பு

வடமராட்சி —

தற்பொழுது வடமராட்சியில் திருட்டு மண் அகழ்வு அதிகரித்து வருவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்த மண் அகழ்வு நடவடிக்கை குடத்தனை, மணற்காட்டுப் பகுதிகளில் பெருமளவில் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுனாமி ஏற்பட்டபோது, பெரும் நிலப்பரப்புக் கடலாக மாறியுள்ளதுடன், இயற்கை அழிவுகளைத் தவிர்ப்பதற்கு மண் அகழ்வைத் தடுப்பது மிகவும் முக்கியமானதாகும். இதனை உணராமல் திருட்டுத்தனமாக மண் அகழப்படுவது குறித்து அந்தப் பகுதி மக்கள் பெரும் விசனம் தெரிவித்தனர்.

திருட்டு மண்ணை அகழ்வோர் இரவிரவாக மண் அகழ்வை மேற்கொண்டு விநியோகிப்பதும் தெரியவந்துள்ளது. (12)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை பத்து



பெயர் : வி.சிவாஸ்கரன்
முகவரி : வல்வெட்டித்துறை.





# வலி. தெற்குப் பகுதி கால்நடை வளர்ப்போர் தொடர்பு கொள்ளவும்!

உடுவில் —

வலி.தெற்கு பிரதேசத்திலுள்ள - ஆடு, மாடு, கோழி வளர்ப்போர் தம்மிடமுள்ள கால்நடைகளைப் பதிவு செய்து கொள்ளுமாறு வலி. தெற்கு கால்நடை வைத்தியர் அறிவித்துள்ளார்.

தாம் நல்ல இனக் கோழி மற்றும் கால்நடைகளைப் பெற்று வழங்க இருப்பதுடன், தேவைப்படுவோருக்குப் பதிவுசெய்தவர்களிடமிருந்து கால்நடைகளைப் பெற்று வழங்கமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (101)

# சிறப்பாக நேற்று நடைபெற்ற கலைக்கோட்டம் திறப்புவிழா





யாழ்ப்பாணம்

திருமறைக் கலாமன்றத்தின் கலைக் கோட்ட புதிய கட்டடத் தொகுதி திறப்பு விழா நேற்று நண்பகல் 12 மணியளவில் மன்றப் பிரதி இயக்குனர் ஜோ.ஜோன்சன் ராஜ்குமார் தலைமையில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் டேவிட் வீதியில் அமைக்கப்பட்ட கலைக் கோட்டத்தை முன்னாள் யாழ் மறைக்கோட்ட குருமுதல்வர் அருட்திரு.செல்வராசா அடிகள் திறந்து வைத்தார்.

அருட்தந்தை குணசீலனின் ஆசியுரையுடன் யாழ். மறைக்கோட்ட குருமுதல்வர் அருட்திரு நீக்கிலஸ் மூத்த கலைஞர் ஜோர்ஜ் ஆகியோர் உரையாற்றினர்.

கட்டட நிர்மாணப் பணிகளில் பங்குகொண்ட கலைஞர்கள் அன்பளிப்புகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்த நிகழ்வில் அருட்சகோதரர்கள், அருட் சகோதரிகள், கலைஞர்கள், மன்ற மூத்த உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.




ஜோசப் கிருஸ்ணாவின்

# கிளிப்பிள்ளை மாண்மியம்



வாசிம் ஜாபர் -அதிஷ்டம் அழைக்கிறது

இந்திய கிரிக்கெட் அணி தற்போது சில வெற்றிகள் பெற்றுக் காட்டக் கூடும். அதற்காக முன்பு வெற்றிகள் ஏதும் பெற்றுவிடவில்லை என்று கருதப்பட்டுவிடக் கூடாது. அதாவது, ராகுல் ட்ராவிட் காலத்தில்தான் வெற்றிகள் தெரி கின்றது. சௌரவ் கங்கூலி காலத்தில் அப்படியெல்லாம் இல்லை என்றும் ஆகிவிடாது. இன்னொரு வகையில் பயிற் றுனர் ஜோன் ரைட் காலத்தில் ஏதும் நடைபெறவில்லை. தற்போதைய பயிற்றுனர் கிறேக் செப்பலின் காலத்தில் தான் எல்லாம் நடைபெறுகிறது என்பதும் அர்த்தம் அல்ல.

ஆனால், இப்பொழுதுதான் இந்திய அணியினர் புனர் ஜென்மம் எடுத்தது போலவும், இதுவே இந்தியாவின் பொற்காலம் என்றும் கருதுவதாகத் தெரிகிறது. இந்த நிலையில்தான் ராவிட்டின் தலைமைத்துவம் பற்றிச் சீர்தூக்கிப் பார்க்கப்படுகிறது. முன்பொருமுறை ராகுல் டிராவிட் கருத்துக் கூறும் போது அணித் தெரிவு என்பது என்வேலையல்ல. தருகின்ற அணியை வைத்து விளையாடுவதே என்கடன் என்று கூறியிருந்தார். பயிற்சி தொடர்பில் தன் பங்கு ஏதும் இல்லை. அது பயிற்றுனர் வேலை என்றும் கூறியிருந்தார். இப்படியாக வெறும் பொம்மலாட்டத் தலைவராக கருத்துக் கூறிக் கொண்டி ருக்கும் டிராவிட் இப்போது இல்லை என்று சொல்வதன் மூலம் ஓர் உண்மையை ஆம் என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்.

அதாவது, டிராவிட் பெயரளவிற்கு அணித் தலைவராக இருக்க பயிற்றுனர் கிறேக் செப்பல் REMOTE CONTROL இல் அணியை இயக்குவதாகக் குற்றச்சாட்டு எழும்பியிருந்தது. பாகிஸ் தான் சுற்றுப்பயணத்தின் முன் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசிய டிராவிட் அவர் ஆதிக்கம் செலுத்தும் ஒருவராக இல்லை. எனது கருத்துக்களுக்கு நிறைய மதிப்புக் கொடுக்கிறார். நாங்கள் இருவரும் கருத் தொருமித்து செயற்படக் கூடியதாக இருக்கிறது என்று கூறியிருக்கிறார்.



ராகுல் டிராவிட்-ஆம்மாம் சாமி

அதோடு பட்பட்டென்று கருத்துக்களையும் கூறிவிடும் செப்ப லின் பாணியையும் DEFEND பண்ணுகிறார் டிராவிட். அவரது செயற்பாடுகளின் இறுதி நன்மைகள் பற்றி பொறுத்திருந்து பார்த்தால் தெரியும் என்கிறார் டிராவிட்.

சௌரவ் கங்கூலி காலத்தில் ஹர்பஜன், ஷேவாக் போன்ற இன்னோ ரன்ன வீரர்கள் கங்கூலியின் ஆதரவுடன் அணியில் இணைக்கப்பட்டா ர்கள். இன்று அவர்கள் அணியின் பிரிக்கப்படமுடியாதவர்கள்.

ஆனால், இதே கங்கூலி செப்பலின் கபடத்தில் அணியை விட்டுத் தூக்கப்பட்டபோது, இதே டிராவிட் மௌனம் சாதித்தார். அதாவது – செப்பல் செய்தது சரியென்று தலையசைத்தார். இதன் பின் இந்திய கிரிக்கெட் சபையின் தலைமை ஜக்மோகன் டால்மியாவிடம் இருந்து சரத்பவாரிடம் கைமாறியபோது, நிர்வாக கட்டமைப்பில் சில மாற்றங்கள் ஏற்பட்டது. அதுபற்றி டிராவிட் கதைக்காமல் விட்டது பெரிதுபண்ணப்படத் தேவையில்லை. இருந்தாலும், கங்கூலியாக இருந்தால் தனது கருத்தை எடுத்துக் கூறியிருப்பார். இதைவிட அதிகாரம் கைமாறிய போது, மும்பாய் வீரர் வாசிம் ஜாபர் திடீரென்று அணிக்குள் உள்வாங்கப்பட்டார். இதேவேளை இவரைவிட சிறந்த வீரர் பட்டியல் ஒன்றிருந்தபோதும், அவர்கள் பாதிக்கப்பட்ட போதும் டிராவிட் வாய் திறக்கவில்லை. அதாவது, வாய் திறக்கும் துணிவு அவருக்கில்லை.

எனவே, இவர் தனது தலைமைப் பதவியைத் தக்கவைத்துக்கொள்ள மௌனம் காக்கிறார் என்பது நன்றாகத் தெரிகின்றது.

இது எத்தனை நாட்களுக்கு என்பதுதான் கேள்வி. ஏனென்றால், இந்திய கிரிக்கெட் அணியின் ஏற்ற இறக்கத்தில் அணித்தலைவரின் ஆளுமையின் ஆதிக் கமும் பெரும் பங்கு வகிக்கும்.

இப்படியான அணித்தலைவர்கள் ஆமாம் சாமி போட்டுக் கொண்டிருக்க, அணியின் இறக் கங்கள் என்று வரும் போது இவர்களுக்கு கைகொடுக்க யாரும் இருக்கமாட்டார்கள். ஏனெனில், சௌரவ் கங்கூலி போன்ற முதுகெலும்பு நிமிர்ந்த ஒரு அணித்தலைவருக்கே இந்த நிலை என்றால், டிராவிட் போன்ற ஆமாம் சாமிகளுக்கு எந்த நிலை.

---


மக்டலினின்

# பரிதாபமாகப் பார்க்கவா?



சானியா மிர்ஸா - மௌனம் உதவுமோ...?

சானியா மிர்சா நிதானமாக இருக்கிறாரா அல்லது குழம்பிப்போய் இருக்கிறாரா தெரியவில்லை. என்றாலும், அவர் சார்ந்த மதம் தொடர்பில் அவர் மீது தொடுக்கப்படும் அம்புகளை எதிர்நோக் கத்தயாராக இருக்கிறார் என்று தெரிகிறது. இந் தியப்பெண்களுக்கு விளையாட்டுத்துறையில் ஒரு ஆதர்சமாக இருப்பவர் சானியா மிர்சா. 2005ஆம் ஆண் டில் WTA சுற்றுப் போட் டியில் வெற்றிகண்ட முதல் இந்தியப் பெண்மணி என்ற பெயர் பெற்றவர். இவர் இதனைத் தொடர்ந்து சர்வ தேச ரெனிஸ் உல கம் ஆச்சரியப்பட தக்க வகையில் தர வரிசையில் 34 இடத்துக்கு முன் னேறினார். இப் பொழுது சானியா கலந்து கொள்ள அழைக்கப்படாத சுற்றுப் போட்டிகளே இல்லை என்று கூறலாம்.



இவரை இழக்க முடியாது

ஆனால், இவர் ரெனிஸ் ஆடும்போது அணியும் உடை இவரை அரை நிர்வாணக் கோலத்தில் காட்டுகிறது என்றும், இது இஸ்லாத்துக்கு விரோதமானது என்றும் மார்க்கத் தலைவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். இது இப்போது சில மாதங்களாகவே சானியாவுக்கு வெறுப்பேற்றிக் கொண்டிருக்க, மீண்டும் சானியா வாய்திறந்திருக்கிறார். எல்லோரும் அனாவசியமாக விளையாட் டுத்துறையையும், மதத்தையும் இணைத்து குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். நான் ஒரு விளை யாட்டுத்துறை சார்ந்தவள் என்ற வகையில் கூறப்படும் விமர்சனங்களை பகுத் தாயும் மனநிலை எனக்கு உண்டு.

ஆனால், மதம் பவித்திரமானது. அது எனது தனிப்பட்ட விடயம். அதனை விளையாட்டு டன் இணைப்பது அநாவசியம் என்கிறார் இவர்.

மேலும், இந்தியா நூறு கோடி மக்களைக் கொண்டதொரு நாடு. ஒவ்வொருவரும் ஒவ் வொரு கருத்துக் கூறிக் கொண்டிருப்பார்கள். இதற்கெல்லாம் பதில் கொடுத்துக் கொண்டி ருக்க அவசியம் எனக்கில்லை என்றும் கூறுகி றார். எனது விளையாட்டில் நான் கூடிய கவனம் செலுத்த வேண்டும். மைதானத்தில் இறங்கினால் எனது முதல் கரிசனை ரெனிஸ் மட்டுமே. ஆகவே, வேறெந்த விடயத்தையும் விட அந்த வேளையில் விளையாட்டை முதன்மைப் படுத்துவேன் என்கிறார்.

இப்போதுள்ள பிரச்சினை என்னவென்றால், இவர் சார்ந்த மதத்தவர்கள் ஏன் இவர் மீது மட்டும் கண்வைக்கிறார்கள் என்பதுதான். எத்தனையோ பெண்கள், எத்தனையோ விளையாட்டுக்களில் ஈடுபடுகிறார்கள். ஆனால், என்னை மட்டும் ஏன் குறி வைக்கிறார்கள் என்பதே இவரது கேள்வி. விளையாட்டுத்துறையை நேசிக்கும் சானியா - இப்படியான உடைசார்ந்த சர்ச்சை ஒன்றில் சிக்கி, சஞ்சலப்படும் நிலையில் இவரால் நீண்டகாலம் இவ்விளை யாட்டில் தாக்குப்பிடிக்க முடியுமா என்பது புரியாத புதிர்தான்.

---

விமலனின்

இந்திய– பாகிஸ்தான் அணிகளுக்கிடையே லாகூரில் முதல் டெஸ்ட் போட்டி நடைபெற்று வரும் இவ்வேளையில் – ராகுல் டிராவிட் வெற்றிக்கிண்ணத்துடன் நாடு திரும்புவாரா

# 2004 போன்றதொரு 2006?



இர்பான் பதான் வேகமே மோகம்


என்ற ஆவல் ஒவ்வொரு இந்திய ரசிகர்களிடமும் குடிகொண்டுள்ளது. டிராவிட் தலைமைப் பொறுப்பை ஏற்ற பின்னர் அந்நிய மண்ணில் ஆடுகின்ற முதல் தொடர் இது என்பதால், அனைத்துத் தரப்பினரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

ஆனாலும், பாகிஸ்தான் மண்ணில் இந்தியாவுக்குக் கிடைத்த முதல் வெற்றி ராகுல் டிராவிட்டின் தலைமையிலேயே கிடைத்திருந்தது. 16 ஆண்டுகளுக்குப் பின்னர் 2004 ஆம் ஆண்டு இந்திய அணி பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டபோது – முல்ரானில் நடைபெற்ற முதல் டெஸ்டில் கங்கூலி காயம் காரணமாக அணியில் இடம் பெறாதபோது, ராகுல் டிராவிட் இந்திய அணிக்குத் தலைமைதாங்கி முதல் வரலாற்று வெற்றியைப் பெற்றுக் கொடுத்தார். இந்த டெஸ்ட் போட்டியிலேயே ஷேவாக் 309 ஓட்டங்கள் குவித்து, முச்சதம் குவித்த முதல் இந்திய வீரரானார். அத்தோடு சச்சின் டெண் டுல்கர் 194 ஓட்டங்களுடன் இருந்தபோது ஆட்டம் இடைநிறுத்தப்படுவதாக அறிவித்த துரதிஷ்டம் நிறைந்த சோக காவியமும் இந்தப் போட்டியிலேயே நிகழ்ந்திருந்தது.

இதையடுத்து லாகூரில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்டில் கங்கூலி அணிக்குத் திரும்பி தலைமையை ஏற்று, அணியை வழிநடத்திய போதும், அந்தப் போட்டியில் பாகிஸ்தானே வெற்றி பெற்றிருந்தது. ஆனாலும் தொடரை நிர்ணயிக்கும் ராவல்பிண்டி இறுதி டெஸ்டில் இந்திய அணி இனிங்ஸ் வெற்றிபெற்று, தொடரை முதன் முறையாகக் கைப்பற்றியது. ஆக பாகிஸ்தான் மண்ணில் டெஸ்ட் தொடர் வென்ற பெருமை ராகுல் டிராவிட், சௌரவ் கங்கூலி இருவரையுமேசாரும்.

இந்த வகையில் இதனை முறியடித்து நடைபெறும் டெஸ்ட் தொடரை டிராவிட் தலைமையிலான இந்திய அணி வென்று சாதனை படைக்குமா என்பது இன்னும் சிறிது நாட்களில் தெரிந்துவிடும்.

இதேவேளை ஒவ்வொரு அணியினரும் போட்டி நடத்தும் மைதானங்களைத் தெரிவு செய்யும் போது, குறித்த அணியுடனான கடந்த காலப் பெறுபேறுகளின் தமக்குச் சாதகமானதையே தெரிவுசெய்வர். இந்தச் செயற்பாட்டுக்கு பாகிஸ்தான் கிரிக்கெட்சபையும் விதிவிலக்கல்ல போல் தெரிகிறது. பாதுகாப்புக் காரணங்களைத் தவிர்த்துப் பார்த்தால் – 2004 இல் இந்தியா வெற்றி பெற்ற முல்ரானிலும், ராவல்பிண்டியிலும் போட்டி களை நடத்தாமல் பைசலா பாத்திலும், கராச்சியிலும் போட்டிகளை நடத்த உத்தேசித் திருப்பதையும், 2004 லாகூர் போட்டியில் பாகிஸ்தான் வெற்றி பெற்றதை மனதிருத்தி, தற்போதைய தொடரில் முன்னிலை வகிப்பதற்கு ஏதுவாக முதல் டெஸ்ட் போட்டியை லாகூரில் நடத்த முன்வந்திருப்பதையும் எடுத்துக்காட்டலாம்.



நவீட் உல் ஹசன் மோதலுக்கு மோதல்

2004 பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தில் முல்ரான் ஆடுகளத்திலுள்ள புற்களைச் சிறிது அகற்றி, வேகப் பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமாக ஆடுகளத்தை அமைக்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை உத்தரவிட்டபோதும் – ஆடுகள அமைப்பாளர்கள் அளவுக்கும் அதிகமான புற்களை அகற்றிவிட்டிருந்தனர். இதனால் ஆடுகளம் சுழற்பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமாகி போட்டி முடிவை இந்தியாவின் பக்கம் திசை திருப்பியிருந்தது. எனவே சூடு கண்ட பூனைகளான பாகிஸ்தானியர்கள் இம்முறை இவ்விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்துவர் என்பதில் சந்தேகமில்லை.

இந்த அடிப்படையிலேயே பாகிஸ்தான் வெற்றிபெற வேண்டுமாயின் வேகப்பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமான மைதானம் அமைக்கப்படவேண்டுமென இத்தொடருக்கு முன்னதாக வசீம் அக்ரம் கோரிக்கை ஒன்றை விடுத்திருந்தார். அதையே பாகிஸ்தான் கிரிக்கெட் சபையும் செயற்படுத்தியுள்ளது போல் தெரிகிறது. ஏனென்றால் இதனை ஆமோதிப்பது போல் சுழற்பந்து வீச்சாளர் டனேஷ் கனேரியா வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமான அவுஸ்ரேலியன் கொக்கபுரா பந்துகளையே இந்தத் தொடரில் பயன்படுத்தவுள்ளதாகக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

எனவே வேகப்பிசாசுகளின் படையெடுப்பாய் இத்தொடர் அமையப் போவதோடு, ஒவ்வொரு போட்டியிலும் ரசிகர்களின் இதயமும் எகிறிக் குதிக்கப் போகிறது என்பதும் புலனாகிறது.


சச்சின் டெண்டுல்கர் கண்ணீர் மல்கி நிற்கிறேன்

நிர்மலனின்

# இன்று வா நாளையும் வா

இந்திய - பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையிலான கிரிக்கெட் தொடர்களை ஆஷஸ் தொடர்போல இரண்டு வருடத்துக்கு ஒருமுறை மாறி மாறி நடத்தினால் என்னவென்று ஆராயப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் - 2010 ஆம் ஆண்டு இந்தியா - பாகிஸ்தான் செல்வது பற்றிய கதை ஒன்று பிறந்திருக்கிறது. அதா வது 2010 இல் பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தை இந்தியா மேற்கொள்ளும்போது, அப்போது 37 வயதையடையப் போகும் சச்சின் அணியில் இருப்பாரா? இல்லையா? என்ற மாதிரி யோசித்து, அநேகமாக அணியில் இருக்கமாட்டார் என்றவாறாக முடிவுவருகிறது.

சச்சின், பாகிஸ்தான் இணைப்புப் பற்றிப் பேசுவதற்கு ஒரு கார ணம் உண்டு. 1989ஆம் ஆண்டு நவம்பர் சச்சின் சர்வதேச டெஸ்ட் களத்தில் நுழைந்த போது வயது பதினாறு மட்டுமே. அந்த வேளையில் அவர் எதிர்கொண்ட பந்துவீச்சாளர்கள் அப்போதைய அதிவீரர்களான வசீம் அக்ரம், வக்கார் யூனிஸ். அப்துல்காதர். பதினைந்து ஓட்டங்களுடன் சச்சின், வக்கார் யூனுசின் பந்துவீச்சில் ஆட்டமிழக்க இரண்டாவது இனிங்சில் சச்சின் துடுப்பெடுத்தாட அனுமதிக்கப்படவில்லை.

அந்தவேளையில் தன் டெஸ்ட் வாழ்க்கை முடிவுக்கு வந்து விட்டதாகவே சச்சின் எண்ணியிருப்பார். இன்று தனது 32 வயதில் பாகிஸ்தான் செல்லும் போது சச்சினின் கணக்கில் 35 டெஸ்ட் சதங்கள். இது உலக சாதனை. ஒருநாள் போட்டிகளில் 38 சதங் கள். இரண்டு வகை ஆட்டங்களிலும் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட ஓட்டங்கள்.

சச்சின் இம்முறை பாகிஸ்தானில் உணர்வு பூர்வமாகவே விளையாடுவார் என்று எண்ணலாம். மேலும் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான போட்டிகள் மற்றப் போட்டிகளைவிட வித்தியாசமானவை. அதோடு எல்லாப் போட்டிகளுமே அழுத்தம் நிறைந்தவைதான் என்கிறார். சச்சின் பற்றி எவ்வளவோ கருத்துகள் வெளிவந்திருக்கும். உங்களது வெற்றிக்குக் காரணம் என்னவென்று கேட்டபோது எனது ஒழுக்கம் என்று சடாரெனப் பதிலளித்தார் அவர். ஒரு விமர்சகர் தன் கருத்தைப் பின்வருமாறு கூறுகின்றார்.

2000 ஆம் ஆண்டில் ஆட்ட நிர்ணயச் சதியில் இந்தியக் கிரிக்கெட் அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருந்த வேளையில், சச்சினைப்பற்றி யாருமே விரல்சுட்டிக் குற்றஞ்சாட்டவில்லை. அவரது கிரிக்கெட் வாழ்க்கை அப்பழுக்கற்றது என்று கூறியிருக்கிறார். எதிரணி வீரர்கள் சச்சினைப் பற்றிக் கூறியுள்ள புகழுரைகள் எண்ணி லடங்காதவை. ஆனால் சச்சின் ஒரு விடயத்தைக் குறிப்பிடுகிறார்.

"ஒரு அளவுக்கு மேல் திறமையை அதிகரித்துக் கொண்டு போகமுடியாது. ஆனால் சூழ்நிலைகளுக்கு ஏற்ப எம்மை மாற்றி விளையாடிக்கொள்ள வேண்டும்" என்று கூறியிருக்கிறார்.


சொஹெப் அக்தர் என் இலக்கு அவரே

இப்போதுள்ள கேள்வி பாகிஸ்தானில் சச்சின் எவ்வாறு விளையாடப் போகிறார் என்பதுதான். அவரது ரசிகர்கள் நிறையவே எதிர்பார்ப்பார்கள். ஆனால் சொஹெப் அக்தர் அவரை வீழ்த்தியே தீருவதென்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்.

இங்கிலாந்துத் தொடருக்கு முன் சொஹெப் அக்தர் பாகிஸ்தான் அணிக்கு அவ்வளவு விரும்பப்பட்டவரல்ல. ஆனால் இங்கிலாந்துத் தொடரில் பதினேழு விக்கெட்டுக்களைச் சரித்தபின் அவரைப் புகழாதவர்கள் இல்லை. ஒரு புறம் அக்தர். மறுபுறம் சச்சின். எப்படி முடிகிறதென்று பொறுத்திருந்து பார்ப்போம்.


பிறைன் லாரா- பேசப்பட்டவர்கள்

லிவிங்ஸ்ரனின்

# மறைந்திருந்த கனி

இவரைப் பற்றி விலாவாரியாக எழுதவேண்டியுள்ளது அவசியம் என்பது இப்போது அவசியமாகி விட்டது. யாரும் அறியாமல் ஆழ்கடலில் உருவாகித் திடீரெனக் கரையைத் தாக்கும் சூறாவளியாக எழுந்து நிற்கிறார் ரிக்கிபொண்டிங். எனவே, இவ்வேளையில் ஒரு சிறு குறிப்பையாவது எழுதாமல் விட்டால், அது நியாயமாகாது. ஏனெனில், தென்னாபிரிக்காவுடனான மூன்றாவது டெஸ்ட் போட்டி ரிக்கி பொண்டிங்கின் நூறாவது டெஸ்ட், இந்த வகையில் ரிக்கி பொண்டிங்கிற்கு இது மிக முக்கியமான டெஸ்ட். தற்போது உலகத்தரவரிசையில் முதலாவது இடத்தில் இருக்கும் பொண்டிங் நூறாவது டெஸ்டில் நூறு அடித்ததும், அவரது ஆளுமை எப்படிப்பட்டதென்று தெரிந்தது. ஆனால், கிரேம்ஸ்மித் SPORTIVE DECLARATION செய்ய ஒரு டெஸ்ட்போட்டியை ஒரு நாள் போட்டியாக மாற்றி, அதிலும் 143 ஓட்டங்களைக் குவித்து, ஆட்டத்தையே வெற்றியின் பக்கம் கொண்டு சென்றபோது இவரைப் பற்றி என்ன சொல்வதென்றே தெரியாமல் போய்விட்டது.

மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தென்னாபிரிக்காவிற்கான தொடரில் மெல்பேர்ண் டெஸ்டில் இவர் ஒரு சதம் பெற்றுத் தொடர்ந்து SCG மைதானத்தில் மூன்றாவதும், இறுதியுமானதுமான டெஸ்டில் இரண்டு சதங்கள் போட்டு மொத்தம் 515 ஓட்டங்களையும் பெற்று ஆட்டத் தொடர் நாயகன் விருதையும் தட்டிக்கொண்டார். இந்த 31 வயது வீரர் இங்கிலாந்தின் ஆஷஸ் தொடர் தோல்வியின் பின் அவுஸ்ரேலியா திரும்பியபின் இறுதியாக விளையாடிய ஏழு டெஸ்ட் போட்டிகளில் ஐந்து சதங்களைப் பெற்றுள்ளார். ஒரு தரவுக்காகப் பார்த்தால், கிரிக்கெட் சகாப் தம் பிரட்மனின் 29 சதங்களுக்கு ஒன்று குறைவாக 28 சதத்துடன் நிற்கிறார் இவர். முன்னாள் அவுஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்ரீவ்வோவின் கணக்கில் இருக்கும் சதங்கள் 32. சச்சின் டெண்டுல்கர் அண்மையில்தான், கவாஸ்கருடன் சமப்படுத்தியிருந்த 34 டெஸ்ட் சதங்களுக்கு அப்பால் சென்று உலகின் டெஸ்ட் சதத்தில் முதல்வன் என்ற பெருமையுடன் நிற்கிறார். இன்னொருபுறம் மேற்கிந்தியத் தீவுகளின் பிறைன்லாறா 31 சதங்களுடன் சச்சினுக்கு ஒரு அச்சுறுத்தலாக விளங்குகின்றார். இதில் ஒன்றைப் பார்த்தால் சச்சினையும், லாறாவையும் உன்னிப்பாக பார்த்த அளவிற்கு ரிக்கிபொண்டிங்கை உன்னிப்பாக யாரும் பார்க்கவில்லையோ என்று தோன்றுகிறது. ஆனால், ரிக்கி பொண்டிங் ஒரு செய்தியைச் சொல்லாமல் சொல்கிறார். எதிர்காலத்தில் ஒரு சில சாதனைகளைத் தான் முறியடிக்கும் போது, தன் கிரிக்கெட் விளையாட்டுத்தரவுகள் பற்றிய ஏடுகளைப் பல கிரிக்கெட் விமர்சகர்கள் புரட்டுவார்கள் என்ற செய்திதான் அது.


ரிக்கிபொண்டிங் பேசப்படுகிறீர்கள்

ஜெயராட்டின்

தென்னாபிரிக்க அணிக்கு எதிராக மூன்று டெஸ்ட்தொடரை 2-0 என்று அவுஸ்ரேலியா வென்றுவிட்டது. ஆனால், தென்னாபிரிக்க வீரர்களுக்கு

# வேதனைக்கப்பால் ஒரு பதிவு

எதிரான இனவாத அவமதிப்புகள் மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் நீக்கமற நிறைந்திருந்தன என்பது துயரமான செய்தி. அந்நிய நாடுகளின் அணிகள் விளையாடும்போது, உள்நாட்டு ரசிகர்களால் அவதூறு செய்யப்படுவது என்பது ஒன்றும் புதிய விடயம் அல்ல. ஆனால், அது இனரீதியான அவமதிப்பாக அமையும் போது தன் எல்லையைக் கடந்த செயற்பாடாகத்தான் இதனை நோக்கவேண்டியுள்ளது என்று கவலைப்படுகின்றார் தென்னாபிரிக்க அணியின் பயிற்றுனர் மிக்கி ஆர்தர்.

முதலாவது டெஸ்டில் மக்காயா என்ரினி, ஆஷ்வெல் பிறின்ஸ், கார்னெட் குருகர், போன்றவர்கள் இனவாத ரீதியில் தூற்றப்பட்டார்கள். இரண்டாவது டெஸ்ட் போட்டியின் போது இனவாத தூஷணை செய்த நபர் ஒருவர் மைதானத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார். மூன்றாவது டெஸ்ட் போட்டியும் இதில் இருந்து தப்பி விடவில்லை. ஆனால், இன அவதூறு இது என்பதைவிட, வீரர்கள் மத்தியில் பரஸ்பரம் ஏற்பட்ட மோதல்கள் என்று கூறலாம். ஷேன்வோண் - கிரேம் ஸ்மித் பற்றி பத்திரிகையில் அவதூறான கருத்துக்கூற, அதற்கு ஸ்மித் பதில்கூற விடயம் ரசாபாசமாகி விட்டது. மறுபுறம் மைதானத்தில் அன்ரீ நெல் பல சர்ச்சைக்குள்ளாகி, ரசிகரின் கூச்சல் கூக்குரலுக்கும் உள்ளாகினார். இதிலிருந்து கனவான்களின் ஆட்டம் வேறெங்கோ சென்று கொண்டிருப்பது தெரிகிறது.


பீனிக்ஸ் பறவைகளாய் மீண்டெழுவோம்


இன்னொரு திசையில் பார்க்கும் போது சோம்பல் நிறைந்த வெற்றி தோல்வியற்ற முடிவுக்கு மூன்றாவது டெஸ்ட் போட்டியைக் கொண்டு போக விரும்பாத கிரேம் ஸ்மித் SPORTIVE DECLARATION ஒன்றைச் செய்தார். துரதிஷ்டவசமாக அது அவருக்கு எதிராகப் பாய்ந்து விட்டது. அவர் இப்போது பேசுகிறார்.

அடுத்த மாதம் மூன்று டெஸ்ட் போட்டிகளில் விளையாட தென்னாபிரிக்க மண்ணில் அவுஸ்ரேலியர்கள் கால்பதிப்பார்கள். அப்போது நாங்கள் புதிய வியூகம் அமைத்து, அவர்களை வீழ்த்துவோம். எங்கள் கிரிக்கெட் ரசிகர்களை மகிழ்ச்சிப்படுத்தவேண்டியது எங்கள் கடமை. தென்னாபிரிக்காவுக்கு வரும் போது அவுஸ்ரேலியா மிகக்கடுமையான கிரிக்கெட் ஆட்டங்களை எதிர்கொள்ளும் என்று முடிக்கிறார்.

என்னதான் தென்னாபிரிக்க மூன்றாவது டெஸ்ட் போட்டியில் தோற் றாலும், அதில் அவர்களின் வெற்றியும் ஒன்றிருக்கிறது. அதுதான் அணியின் DECLARATION. மேலும், நீண்டகாலமாகவே தென்னாபிரிக்க அணியை ஏதோ ஒரு துரதிஷ்டம் பிடித்துள்ளது போலத் தெரிகிறது. இரண்டு உலகக் கிண்ண இறுதியாட்டங்களை இழந்ததுடன் சேர்த்தால், இது மூன்றாவது சந்தர்ப்பம். ஆனாலும், இவர்கள் சோர்ந்து போகாதவர்கள்.

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

தமிழீழ கடற்படையின் லெப். கேணல் மறவன் துணைப்படை அணியினருக்கான எட்டாவது பயிற்சிப்பாசறை நேற்று முன்தினம் நிறைவு பெற்றது. இதில் நூற்றுக்கணக்கானோர் இராணுவப் பயிற்சிகளை நிறைவு செய்து வெளியேறினர். இந்த நிகழ்வில் பொதுச் சுடரை லெப். கேணல் ராஜன் கல்விப் பிரிவுப் பொறுப்பாளர் கீதன் ஏற்றுவதையும், நிகழ்வில் பங்கேற்ற தளபதிகள், பொறுப்பாளர்களையும் படங்களில் காணலாம்.

## பவள விழா நிகழ்வு

புதுக்குடியிருப்பு—

முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தின் பவள விழா நிகழ்வுகள் கடந்த திங்கட்கிழமை பாடசாலை அதிபர் வ. நடராசா தலைமையில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக கல்யாண வேலவர் ஆலயத்தில் விசேட வழிபாடு இடம்பெற்று, மங்கள வாத்தியத்துடன் விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டனர்.

பாடசாலையின் நுழைவாயிலில் அமைக்கப்பட்ட பாடசாலையின் ஸ்தாபகர் ச.கணபதிப்பிள்ளையின் உருவப்படம் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது.

முன்னாள் அதிபர் உதயசங்கர் திரைநீக்கம் செய்துவைக்க, திருமதி உதயசங்கர் மலர் மாலை அணிவித்தார்.

# தமிழ் மக்கள் மீது தொடரும் கெடுபிடிகள்; கட்டுப்படுத்த முஸ்லிம்கள் உதவவேண்டும்!

## அம்பாறை அரசியற்துறை கடிதம்

அம்பாறை—

அம்பாறை மாவட்டத்தில் அண்மைக் காலமாகக் குறிப்பாக முஸ்லிம் பிரதேசங்களில் தமிழ் மக்களுக்கு பல்வேறு துன்பங்கள் ஏற்படுத்தப்படுவதோடு, பொருள் அபகரிப்பும், சொத்துக்கள் நாசப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தச் செயல்களில் ஈடுபடுபவர்களைத் தண்டிக்க முஸ்லிம் பெரியோர்கள் முன்வரவேண்டும் என அம்பாறை மாவட்ட விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் கேட்டுள்ளனர்.

இது குறித்து அவர்கள் அனுப்பியுள்ள கடிதத்தில் -

அம்பாறை மாவட்டத்தில் அண்மைக் காலங்களில் முஸ்லிம் பிரதேசங்களில் குறிப்பாக- அக்கரைப்பற்று முஸ்லிம் பிரிவு மற்றும் மருதமுனை போன்ற இடங்களில் தொழில் நிமிர்த்தம் வரும் தமிழ் மக்களுக்கு துப்பாக்கிச் சூடும், பொருள் அபகரிப்பும், சொத்துக்கள் நாசப்படுத்தப்படலும் நிகழ்ந்து வருகிறது.

இவை அனைத்தும் முஸ்லிம் இளைஞர்கள் ஒரு சிலரால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவை இன்று ஒரு நாகரிகமற்ற தேவையற்ற செயலாகும்.

எனவே, வன்மையாக இதை நாங்கள் கண்டிப்பதோடு இன்று தமிழ்பேசும் மக்களாகிய எமக்கு தாயகப் பிரதேசங்களில் அமைதியான வாழ்வும், எமது தேச விடுதலையுமே முக்கியமானது. இவற்றிற்காக நாம் அயராது உழைக்கின்ற இந்தக் காலகட்டத்தில், தமிழ் பேசும் மக்களின் வாழ்வை, ஒற்றுமையை சீரழிக்க எடுக்கப்படுகின்ற தேவையற்ற முயற்சிகள் முறியடிக்கப்பட வேண்டும்.

மேற்படி பிரதேசங்களில் தொடர்ச்சியாக ஏற்படுத்தப்படுகின்ற இந்தச் செயல்களில் ஈடுபடுபவர்களை நீங்கள் தண்டிக்க வேண்டும்.

அக்கரைப்பற்றில் வைத்தியரிடம் மருந்தெடுக்கச் சென்ற இரு இளைஞர்களின் மோட்டார் சைக்கிள்கள் துப்பாக்கி முனையில் பறிக்கப்பட்டு, பின் பொலிஸாரால் மீட்கப்பட்ட சம்பவம்.

அக்கரைப்பற்றில் கோயில் ஐயர் சுடப்பட்டு - மோட்டார் சைக்கிளும், அவர் அணிந்திருந்த நகைகளும் கொள்ளையிடப்பட்ட சம்பவம்.

மருதமுனையில் சலூன் கடை உடைக்கப்பட்ட சம்பவம்.

அக்கரைப்பற்றில் சோளம் விற்கச் சென்றவர் சுடப்பட்ட சம்பவம் - இந்தச் சம்பவங்களில் ஈடுபட்டோரை நாங்கள் தண்டிக்கும் போது - அதை சமூகப் பிரச்சினையாகவும், தம்மை அப்பாவிகளாகவும் காட்ட முனைகின்றனர் சிலர்.

இதனால் இங்கு சமூக உறவும், ஒற்றுமையுமே சீரழிக்கின்றன. வெறுப்புகளே ஏற்படுகின்றன. எனவே இந்தச் செயல்களில் ஈடுபடுபவர்களை முஸ்லிம் பெரியோர்கள் சம்மேளன முன்னோடிகள் முன்வந்து இனங்கண்டு தண்டிக்க வேண்டும் என்பதை அன்போடு வேண்டி நிற்கிறோம்.

தமிழ் பேசும் மக்களாகிய எமக்கு இன்று ஒற்றுமையும், அடிமைப்பட்ட வாழ்விலிருந்து விடுதலையுமே முக்கியமானது என்பதை யாவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

# தமிழ் இசை அரங்கும் புதிய மாணவர் இணைப்பும்!

மன்னார்—

பொங்கல் தினத்தை முன்னிட்டு - மன்னார் தமிழீழ நுண்கலை கல்லூரி சமூகத்தினரால் தமிழிசை அரங்கும், புதிய மாணவர் இணையும் நிகழ்வும் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடத்தப்படவுள்ளன.

உயிலங்குளம் வீதி அடம்பனில் அமைந்துள்ள நுண்கலை கல்லூரி வளாகத்தில் மேற்படி நிகழ்வு இடம்பெறும்.

ஆரம்ப நிகழ்வாக - 3 மணிக்கு நுண்கலைக் கல்லூரி ஆசிரியை செல்வி சர்மிலாவின் தமிழிசை அரங்கு இடம்பெறும். 3.45 மணிக்கு மல்லாவி நுண்கலை கல்லூரி அதிபர் கலாவித்தகர் சத்தியமோகனின் பாட்டு இடம் பெறும்.

அத்துடன், இன்று வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம், நடனம், ஒகன், கிற்றார் ஆகிய பயிற்சிகளுக்கான புதிய மாணவர் இணைப்பும் இடம்பெறும்.

ஆர்வலர்களை தமிழ் இசை அரங்கு நிகழ்வில் கலந்து சிறப்பிப்பதோடு, புதிய பயிற்சி வகுப்புகளிலும் பங்குபற்றுமாறும் மன்னார் நுண்கலைக் கல்லூரி சமூகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# இரவுநேரத்தில் மீன்பிடிக்க மன்னாரில் கடற்படை தடை

மன்னார்—

மன்னார் கடற்பிரதேசத்தில் இரவு நேரத்தில் மீன்பிடிப்பதற்கு மறுஅறிவித்தல்வரை தடைசெய்யப்பட்டுள்ளதாக மன்னார் கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர். உடனடியாக இந்தத் தடை உத்தரவு அமுலுக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நீக்கிலஸ் பிள்ளை தலைமையிலான அரச திணைக்கள அதிகாரிகளுக்கும் - மன்னார் பிரிவின் கடற்படைக் கட்டளைத் தளபதி லியனகேக்கும் இடையே நடைபெற்ற முக்கிய சந்திப்பின்போதே இந்தத் தடை பற்றிய அறிவிப்பு வெளியிடப்பட்ட து.

காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை இரண்டு க டல்மைல் தூரத்துக்கு மட்டுமே மீ வர்கள் சென்று மீன்பிடிக்கலாமென்றும், மாலை 6 மணிக்குக் கரைக்குத் திரும்பமுடியாத மீனவர்கள் அடுத்த நாள் காலை 6 மணிக்குப் பின்னரே திரும்ப அனுமதிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# மட்டக்களப்பில் தொடரும் மழையால் வெள்ள அபாயம்!

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களிலுள்ள பல குக்கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும், சில கிராம மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும் தமக்குத் தகவல் கிடைத்துள்ளதென அரச அதிபர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

மட்டக்களப்பு - பொலன்னறுவை நெடுஞ்சாலையில் கல்லேல்ல பிரதேசம், மன்னம்பிட்டி வீதி ஆகியன நீரில் மூழ்கியுள்ளன.

இதேவேளை - நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள நீர்த் தேக்கங்களில் நீர் மட்டம் உயர்ந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

விக்டோரியா நீர்த்தேக்கத்தில் வான் கதவுகளின் மட்டத்திற்கு நீர் மட்டம் உயர்ந்துள்ளதாக மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. இதன் காரணமாக நீர்த்தேக்கத்திலுள்ள வான்கதவுகளில் இரண்டு - 700 மில்லி மீற்றர் வரை திறந்து விடப்பட்டுள்ளதாக மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் எஸ். ஆர். கே. அறுப்பொல தெரிவித்தார்.

இதேவேளை - ரந்தெம்பே நீர்த்தேக்கத்திலும் வான் கதவுகளின் மட்டத்திற்கு நீர் மட்டம் நேற்றுமுன்தினம் உயர்ந்திருந்தது. இதன் காரணமாக நேற்று முன்தினம் இரவு அரை மணித்தியாலம் வரை இந்த நீர்த்தேக்கத்தின் ஒரு வான் கதவு திறந்து விடப்பட்டிருந்தது.

பொலன்னறுவை பராக்கிரம சமுத்திரத்திலும் நீர் மட்டம் உயர்ந்துள்ளதால் அதன் ஆறு வான் கதவுகளும் எட்டு அங்குலம் வரை திறந்துவிடப்பட்டுள்ளதாக மாவட்ட செயலாளர் ரஞ்சித் விஜேதிலக்க கூறினார்.

இதன் காரணமாக மாவட்டத்தின் தாழ்நிலப் பிரதேசங்கள் சிலவற்றில் வெள்ளம் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளதாக அவர் குறிப்பிட்டார். மாத்தளை மாவட்டத்திலும் கடும் மழை பெய்து வருவதன் காரணமாக, மாவட்டத்தின் தாழ் நிலப் பிரதேசங்கள் சிலவற்றில் வெள்ளம் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மாத்தளை மாவட்டத்திலும் கடும் மழை பெய்து வருவதன் காரணமாக அந்த மாவட்டத்திலுள்ள சில குளங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதுடன், பல்வேறு பகுதிகளில் மண்சரிவு அபாயம் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

# மன்னார் பிரதேச சபை நகரசபையாக தரமுயர்வு

மன்னார்—

மன்னார் பிரதேச சபை - நகரசபையாகத் தரமுயர்த்தப்படவுள்ளதாக மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்யகோன் வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளார்.

இன்று முதல் மன்னார் பிரதேச சபை நகரசபையாக உயர்த்தப்படவிருப்பதாகவும் அந்தச் சபை - தலைவர் ஒருவரையும், உபதலைவர் ஒருவரையும், 5 உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும் எனவும் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் வர்த்தமானி அறிவித்தலில் தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரதேச சபையை நகர சபையாகத் தரம் உயர்த்துமாறு அந்தப் பகுதி மக்கள் நீண்டகாலமாகக் கோரிக்கை விடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

# பூநகரிப் பிரதேசத்தில் பல வீதிகள் நீண்ட காலமாக திருத்தப்படவில்லை

கிளிநொச்சி—

கிளிநொச்சி - பூநகரிப் பிரதேசசெயலர்பிரிவுக்குட்பட்ட வீதிகள் சேதமடைந்திருப்பதால், மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கிவருகின்றனர். இது பூநகரிப் பிரதேசத்தில் பல கிராமங்களில் நீண்டகாலமாகக் காணப்படுகின்ற பிரச்சினையாகும்.

பிரதான வீதிகளும், சிறு வீதிகளும் மிகவும் மோசமான நிலையில் குன்றும் குழியுமாகவும், மணல் சூழ்ந்ததாகவும், பருவமழை காலத்தில் வெள்ளம் சூழ்ந்ததாகவும், பாரிய கிடங்குகளைக் கொண்டதாகவும் காணப்படுகின்றன.

கிளிநொச்சி - பூநகரி வீதியில் நல்லூர்க் கிராமத்தை அண்டிய பகுதியில் வீதி மோசமான நிலையிலும் குன்றுகள் நிறைந்ததாகவும் காணப்படுகிறது.

அதேவேளை - குடமுருட்டி பாலம் மிகவும் சீரற்ற நிலையில் காணப்படுவதால், பருவமழை காலத்தில் பல இடர்களை எதிர் நோக்கவேண்டியுள்ளது.

அடுத்து பூநகரி - மன்னார் வீதியில் செம்மன் குண்டுப் பகுதியில் 50 மீற்றர் நீளம் கொண்ட பாரிய குன்று காணப்படுகிறது. அதேவேளை 200 மீற்றர் நீளம் கொண்ட மண்டைக்கல் ஆற்றுப் பாலமும் திருத்தப்படாது காணப்படுகின்றன.

இது அண்ணளவாக 20 ஆண்டுகளாக உள்ள பிரச்சினையாகும். அத்தோடு நாசிக்குடா சந்தியிலும் பாரிய இரண்டு குன்றுகள் காணப்படுகின்றன.

இந்த வீதியில் நாச்சிக்குடா சந்தியிலிருந்து வெள்ளாங்குளம் வரையான வீதியும் மிகவும் மோசமான நிலையில் காணப்படுகிறது.

## 'உயிர் பெறும் காட்சிகள்' ஓவிய கண்காட்சி

கிளிநொச்சி—

கிளிநொச்சி தமிழீழ நுண்கலை கல்லூரி சமூகத்தினரால் கேணல் கிட்டு வரைந்த ஓவியங்களின் காட்சியான உயிர் பெறும் காட்சிகள் ஓவியக் கண்காட்சி - நாளை 16.01.2006 தொடக்கம் 19.01.2006 வரை காலை 9மணி தொடக்கம் 5 மணி வரை நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி நுண்கலை கல்லூரியில் இடம்பெறவுள்ள மேற்படி கண்காட்சியில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு நுண்கலைக் கல்லூரி சமூகத்தினர் கேட்டுள்ளனர்.

நமது ஈழநாடு

வைர வரிகள்

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்.

- திருக்குறள்

## நமது நோக்கு

# காலத்தால் செய்யும் உதவி

மீண்டும் அதிகரித்துவரும் போர் நெருக்கடிகளாலும் இராணுவ வன்முறைகளுக்குப் பயந்தும் பெருமளவான மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கிச் செல்லத் தொடங்கியுள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் இருந்து வன்னிப்பகுதி நோக்கியும், மன்னாரில் இருந்து தமிழகத்தை நோக்கியும் மற்றும் வேறு பாதுகாப்பான இடங்களை நோக்கியும், திருகோணமலையில் இருந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கியும் இடம்பெயர்வுகள் தொடங்கியுள்ளன.

ஆயிரக்கணக்கான மக்கள் இதுவரை இடம் பெயர்ந்துள்ள நிலையில் - வன்னிக்குச் செல்லும் மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முதற்கட்ட உதவிகளை வழங்குகிறது. ஆனால், தொடர்ச்சியாக இவர்களின் வாழ்க்கைக்கான அடிப்படை உதவிகளைப் பெற்றுக் கொடுக்கவேண்டியது - அரச சார்பற்ற நிறுவனங்களின் பொறுப்பாகும்.

இருப்பிட வசதி, உணவு வசதி, தொழில் வாய்ப்பு என பல்வேறு பரிமாணங்களில் - இடம்பெயரும் மக்களுக்கான தேவைகள் நிறைவேற்றப்படவேண்டியுள்ளது. இவற்றையெல்லாம் தனியொரு தரப்பினரால் மட்டுமே நிறைவேற்றிவிடமுடியாது.

போர் நிறுத்த காலத்தில் பெருமளவான தொண்டர் நிறுவனங்கள் தமிழர் தாயகத்தை நோக்கிப் படையெடுத்தன. முதலில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கென்றும் -

- பின்னர் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்குமென பெருமளவு தொண்டர் நிறுவனங்கள் தமிழர் தாயகத்தில் கால் பதித்திருக்கின்றன.

இவையெல்லாம் மக்களுக்கு போதிய உதவிகளைப் புரிந்தன என்று சொல்லமுடியாவிட்டாலும் கணிசமான உதவித் திட்டங்களை நிறைவேற்றியிருக்கின்றன.

ஆனால் மீண்டும் ஒரு போர் நெருக்கடி ஏற்படுகிறது என்றவுடன் பல தொண்டர் நிறுவனங்கள் மூட்டை முடிச்சுகளோடு வெளியேறத் தொடங்கியிருப்பதாக ஒரு தகவல்.

போர் நெருக்கடி உருவாகி பெருமளவு மக்கள் இடம்பெயர்கின்ற ஒரு சூழலில்தான் தொண்டர் நிறுவனங்களின் பணி அவசியமாகத் தேவைப்படும். நெருக்கடியான வாழ்வுக்கு முகம் கொடுக்கத் தொடங்குகின்ற போதுதான், தொண்டர் நிறுவனங்கள் ஓடிச்சென்று உதவவேண்டும்.

நெருக்கடிகளை எதிர்கொண்டு வாழத் தொடங்கிய பின்னர் - தொண்டர் நிறுவனங்கள் உதவவேண்டும் என்றில்லை. அவர்கள் நெருக்கடிகளை எதிர்த்து எதிர் நீச்சல் போடத் தொடங்கிவிட்டால் அதன்பின்னர் உதவுவது பெரிய விடயமல்ல.

எனவே இடம்பெயர்ந்து செல்லும் மக்களுக்கு உடனடி மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு உள்ளூர், வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வரவேண்டும். இதற்கு தலைமைப் பீடங்கள் அனுமதி தேவையென்று இழுத்தடிப்புச் செய்யாமல் - உடனடி உதவிகளை மக்களுக்கு வழங்குவது அவசியம்.

அதேவேளை, மன்னாரிலிருந்து தமிழகத்துக்கு மக்கள் இடம்பெயரத் தொடங்கியுள்ளதானது - மீண்டும் ஒரு எழுச்சியை தமிழகத்தில் தோற்றுவிப்பதை உணரமுடிகிறது.

கடந்த சில நாட்களுக்குள் 38 அகதிகள் மன்னாரில் இருந்து தமிழகத்துக்குச் சென்றிருப்பதும் - அவர்களது கண்ணீர் கதைகளை - இராணுவ அட்டுழியங்களை தமிழக ஊடகங்கள் பொறுப்புடனும், முக்கியத்துவம் கொடுத்தும் வெளிப்படுத்தி வருகின்றன.

1980களின் தொடக்கத்தில் இந்தியா நோக்கிப் படையெடுத்த ஈழத்தமிழ் அகதிகளை வாரி அணைத்த தமிழகம் இப்போதும் அதே உணர்வுடன் செயற்படுவதாகவே தெரிகிறது.

ஏற்கனவே சுமார் 1 லட்சம் ஈழத் தமிழ் அகதிகளை தாங்கியுள்ள தமிழகம் - தற்போது இடம்பெயரும் மக்களைத் துரத்தியடிக்காமல் வரவேற்பது மகிழ்ச்சிக்குரியது.


ஆயினும் எதிர்வரும் காலங்களில் தமிழகம் நோக்கிப் பெருமளவானோர் இடம்பெயர்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் - கடலில் அவர்களுக்குப் பாதுகாப்பான சூழலை உருவாக்கவேண்டும்.

இரவில் மீன்பிடிக்க மன்னார் கடலில் கடற்படை தடைவிதித்துள்ளதானது - எதிர்காலத்தில் இந்தியா செல்லும் அகதிகளை குறிவைப்பதற்காகக் கூட இருக்கலாம்.

கடந்த காலத்தில் இந்தியா நோக்கிச் சென்ற நூற்றுக்கணக்கான மக்கள் கடலுக்கு இரையான சம்பவங்கள் நடந்தேறின. எனவே இனிமேலும் இப்படிப்பட்ட சம்பவங்கள் நிகழாதவாறு - தொண்டர் நிறுவனங்கள் மட்டுமன்றி இந்திய அரசும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




# தமிழர் மீதான வன்முறைகளுக்கெதிராக பிரித்தானிய அரசு அழுத்தம் கொடுக்கும்!

## சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் தெரிவிப்பு



இலங்கையில் அரச படையினரால் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இராணுவ வன்முறைகளுக்கு பிரித்தானிய வெளியுறவு அமைச்சகத்தின் ஊடாக அரசியல் அழுத்தம் பிரயோகிக்கப்படும் என்று பிரித்தானியாவின் சர்வதேச நாடுகளுக்கான அபிவிருத்தி அமைச்சரும் கரோ பிரதேச நாடாளுமன்ற உறுப்பினருமான கெரத் தோமஸ் தெரிவித்தார். புங்குடுதீவில் கடற்படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட தர்சினியின் நினைவு நிகழ்வு பிரித்தானியாவின் கரோ பிரதேசத்தில் நடைபெற்றது.

புங்குடுதீவு நலன்புரிச் சங்கத்தின் பிரித்தானிய கிளையால் நடத்தப்பட்ட இரங்கல் நிகழ்வில் பிரித்தானியாவின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் கெரத் தோமஸ் கலந்துகொண்டு தமிழ் மக்கள் பிரச்சினை தொடர்பாக உரையை ஆற்றினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் - இலங்கையில் அரச படைகளால் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகளை பிரித்தானிய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் ஊடாக கட்டுப்படுத்த முடியும். அதற்கு பிரித்தானியாவில் உள்ள தமிழ் மக்கள் முன்வந்து தாங்கள் அனைவரும் கையெழுத்திட்டு, என் ஊடாக மகஜர் தருவதற்கு முன்வருவீர்களாக இருந்தால், நான் அதனை பிரித்தானியாவின் வெளியுறவுத்துறை அமைச்சரிடம் கையளிப்பேன். அதற்கு அப்பால் வெளிநாட்டு அமைச்சு ஊடாக இலங்கை அரசாங்கத்திடம் தொடர்பு கொண்டு புங்குடுதீவு கொலை உட்பட அனைத்து அரச வன்முறைகளுக்குமான விளக்கங்களை கோருவதுடன் பாரிய அரசியல் அழுத்தத்தை அவர்கள் மீது பிரயோகிப்பேன்.

இதற்கு தமிழ் மக்கள் முன்வரவேண்டும். தமிழ் மக்களுடன் நான் தொடர்ந்து சந்திப்புக்களில் ஈடுபட விரும்புகின்றேன். சமாதானப்பேச்சுகள் தொடரவேண்டும் என்பதே எமது விருப்பமாகும். இதற்காக நான் எரிக் சொல்ஹெய்மிடமும் நோர்வே அரசாங்கத்திடமும் பல வகையான ஆதரவுகளை தெரிவித்து வருகின்றேன்.

நான் அமைச்சராக இருப்பதால் உங்களுக்கு அனைத்தையும் பகிரங்கமாக கூறிவிடமுடியாது ஆனாலும், நான் தமிழ் மக்கள் பிரச்சினை தொடர்பாக தொடர்ந்து செயற்பட ஆவலாக உள்ளேன். பிரித்தானியாவுக்கான இலங்கைத் தூதுவர் பலவகைகளிலும் சேவையாற்றி வருகிறார்.

நான் இரண்டு தடவை இலங்கை சென்றிருந்தேன். வடக்கு, கிழக்கு உட்பட தமிழர் தாயக பிரதேசத்துக்கு சென்று அவர்களின் அவலத்தை நன்கு அறிந்திருந்தேன். தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனைச் சந்தித்து கலந்துரையாடி இருந்தேன்.

வடக்கு- கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென நிதி ஒதுக்கினோம். ஆனால் இலங்கை அரசு தடை போட்டது. ஆனால் தற்போது வேறு வழிகளில் சிறிதளவு தொகை வடக்கு - கிழக்கு மக்களை சென்றடைகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

### திருமலை தாக்குதலின் எதிரொலி:

## கடற்படை தாக்குதல் அணியின் கட்டளை அதிகாரி இடமாற்றம்!

திருகோணமலை

திருகோணமலையிலுள்ள கடற்படையின் 4 ஆவது அதி வேகத்தாக்குதல் படகுப் படை யணியின் கட்டளை அதிகாரி உள்ளிட்ட 10 அதிகாரிகள் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை கடற்பகுதியில் கடற்படையினரின் டோறா அதிவேகத் தாக்குதல் படகு மீதான தாக்குதலைத் தொடர்ந்து மேற் கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னரே பத்து அதிகாரிகளும் இடம்மாற்றப்பட்டனர்.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் வசந்த கரன்னகொடவினால் இந்த இடமாற்றத்துக்கான உத்தரவு கடந்த 11 ஆம் திகதியிலிருந்து அமுலுக்குவரும் வகையில் வழங்கப்பட்டுள்ளது. திருகோணமலையிலுள்ள டோறா அதிவேகக் கடற்படைப் படகுப் படையணியின் புதிய கட்டளை அதிகாரியாக கப்டன் நிசாந்த உடுகேதன்ன நியமிக்கப்பட்டுள்ளார். (தே)

## மீண்டும் போர் ஏற்பட்டால் பட்டினிக் கொடுமை ஏற்படும்

### ஐ.நா. உலக உணவுத்திட்ட அதிகாரி தெரிவிப்பு

இலங்கையில் மீண்டும் போர் ஏற்பட்டால் பட்டினிக் கொடுமை ஏற்படும் என ஐக்கிய நாடுகள் உலக உணவுத்திட்ட அதிகாரி ஜெப் டேப்டடிக் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த அவர் -

இலங்கையில் 2002 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் முறிவடையும் நிலையில் உள்ளது. இதனால் மோதல் சம்பவங்கள் இடம்பெறும் பகுதிகளுக்கு உணவுப் பொருட்களை எடுத்துச் செல்வதில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

தற்போது நிலவும் இந்தச் சூழ்நிலை நல்லதொரு அறிகுறியாக இல்லை. இந்த நிலைமை இன்னும் மோசமாகலாம். விடுதலைப்புலிகளுக்கும் - அரச படையினருக்கும் இடையில் மீண்டும் போர் ஏற்பட்டால் மக்கள் உணவின்றிப் பட்டினி கிடக்கவேண்டிய நிலையேற்படும். 2004 ஆம் ஆண்டு சுனாமியின்போது ஏற்பட்ட பாதிப்பைவிட மோசமான பாதிப்பைச் சந்திக்க நேரிடும்.

போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டபோது தமிழர்கள் அதிகம் உள்ள வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெருமளவான சிறுவர்கள் போதியளவில் ஊட்டச்சத்தின்றித் தவிக்கும் நிலை ஏற்பட்டது. அதேபோல் 5 வயதுக்கும் குறைவான குழந்தைகளில் பாதிக்கும் மேல் எடை குறைவாகப் பிறந்தனர்.

பாடசாலைகளில் மாணவருக்கு சத்துணவு வழங்கும் திட்டம் மற்றும் இதர உணவுத்திட்டங்களால் சிறுவர்கள் ஊட்டச்சத்து இன்றி அவதிப்படும் நிலை குறைந்தது. கடந்த மாதம் இலங்கையின் வடக்கு பகுதிகளில் லொறிகளில் உணவை எடுத்துச் செல்வதில் பிரச்சினை ஏற்பட்டது. அங்கு மீண்டும் போர் ஏற்பட்டால் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள யாழ்ப்பாணம் மற்றும் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பிரதேசங்களுக்கு உணவை எடுத்துச்செல்ல முடியாத நிலை ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# கர்நாடக சங்கீத வளர்ச்சியில் இசைமணி நடேசன்!



கோப்பாய்ப் பிரதேசத்தில் உள்ள நீர்வேலிக் கிராமம் கர்நாடக சங்கீத வளர்ச்சிக்கு ஒரு பெருமகனைத் தந்து கர்நாடக இசை வளர்ச்சிக்கு உழைக்கும் அரியபேற்றைப் பெற்றுக் கொண்டது!

நீர்வேலியூர் சிவசங்கர பண்டிதரின் வழித்தோன்றலான சின்னத்தம்பி வேலுப்பிள்ளைக்கும் நாச்சிப்பிள்ளையம்மையாருக்கும் 20.12.1920 ஆம் ஆண்டில் உதயமான திருமகனுக்கு நடேசன் என்னும் நாமம் சூட்டிப் பாசம், பண்பு, அன்பு, அறிவு முதலான பண்புகளை அல்லும் பகலும் அமுதுடன் ஊட்டி வளர்த்தனர் பெற்றோர்!

இவர் தமது ஆரம்பக் கல்வியை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிலும், உயர் கல்வியைக் கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரியிலும் கற்றுயர்ந்து நின்றார்!

திரு.நடேசன் கர்நாடக சங்கீதத்தின் மேற்கொண்ட தீராக் காதலால் அண்ணாமலை இசைக் கல்லூரியில் அனுமதி பெற்று கர்நாடக இசைகற்று வருவதற்காகத் தமிழ்நாடு பயணமானார். அங்கு மதுரைச் சங்கரசிவம், மதுரை சோமசுந்தரம், ஆலத்தூர் சகோதரர்கள், பழனி சுப்பிரமணியபிள்ளை, இராமநாதபுரம் கிருஸ்ணன், இராமநாதபுரம் முருகபூபதி, இராமநாதபுரம் வேணுகோபால் முதலானோரிடம் இசைபயிலும் பெருவாய்ப்பையும் பெற்றார்! கல்லூரியால் வழங்கப்பெற்ற இசைமணி என்னும் பட்டத்துடன் 1948 ஆம் ஆண்டு தம்மூர் மீண்டார்!

யா/ வண்ணை நாவலர் பாடசாலையில் இசையாசிரியராகத் தம் பணியைத் தொடங்கிய திரு.நடேசன் சில காலம் இந்தப் பாடசாலையில் பணி செய்த பின்பு, யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக்கு இசையாசிரியராக இடமாற்றம் பெற்றார். இங்கு இவர் 31 ஆண்டுகள் தொடர்ந்து இசையாசிரியராகச் சிறப்புடன் பொறுப்புடன் பணியாற்றி, அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்!

இவற்றிடையே நடேசன் அவர்கள் ஆனைக்கோட்டை பேராயிரவர் உடையார் மரபில் உதித்த கதிரவேல் விதானையார் சிவக்கொழுந்து தம்பதியினரின் மகளான மகேஸ்வரி என்னும் மங்கை நல்லாளை மணம் கொண்டு மூன்று பெண் பிள்ளைகளுக்கும், ஐந்து ஆண் பிள்ளைகளுக்கும் தந்தையானார்!

இன்றும் கர்நாடக இசை



வானில் சுடரொளி பரப்பும் திருமதி. பூமணி இராசரத்தினம், திருமதி. மோகனாம்பிகை கணேசன், பொன்.வாமதேவன், சொரூபராணி செல்லையா, டபிள்யு. நேசராஜ், தியாகேஸ்வரி 'சிவநாதன், புஸ்பராணி துரைசிங்கம் ஆகியோர் இவரிடம் இசை பயின்றோரில் சிலராவர்!

இலங்கை வானொலியில் மிக நீண்ட காலமாக இசைக் கச்சேரிகளை நிகழ்த்தி வந்த நடேசன், தமது இன்னிசை அழுத்தத்தால் ஆயிரம் ஆயிரம் ரசிக நெஞ்சங்களில் இடம் பிடித்தார் என்றால் அது மிகையாகாது!

தென்மராட்சி இசைக்கலை மன்றம் என்னும் பெயரில் 1955 ஆம் ஆண்டில் சாவகச்சேரியில் மன்றமொன்று ஆரம்பிக்கப் பெற்று, இசைவகுப்புகளையும், ஆண்டுதோறும் இசைவிழாக்களையும் மிக நீண்ட காலமாகச் சிறப்புடனும், வெற்றிகரமாகவும் நடத்தி வந்ததாயினும், இன்று இந்த மன்றம் செயலிழந்து பணி மறந்து நிற்கிறது.

இந்தமன்றம் உருவாகுவதற்கு அல்லும் பகலும் அயராது உழைத்த சிலருள்ளே திரு.நடேசன் விசேடமாகக் குறிப்பிடத்தக்கவரென்பதுடன், தமது இறுதிக் காலம் வரை இதன் செயலாளராக இருந்து இவர் அரும்பணியாற்றிவந்தமை சாற்றுவதற்குரியதும், போற்றுதற்குரியதுமாகும்.

இவரது அயராத முயற்சியால் அருள்மிகு சாவகச்சேரி வாரி வனநாதர் சிவன் கோவிலின் வடக்கு வீதிக்கு மறுபக்கத்தில் காணியொன்று பெறப்பட்டு, கலையரங்கம் அமைக்கப்பட்டு வந்ததெனிலும், இதன் தலைவர் சங்கீத பூஷணம் சி.விநாசித்தம்பியினதும் இவரினதும் மறைவின் பின்பு அக்கலையரங்கம் அமைக்கும் அரும் பணி ஸ்தம்பித்துவிட்டமை கலைஞர்களையும், சுவைஞர்களையும் வருத்துமொருவிடயமாகும்!

15.01.1982 ஆம் ஆண்டில் திடீரென இன்னிசையே வடிவான அருள்மிகு வாரிவனநாதப் பெருமானின் இணையடியைச் சென்றடைந்த இசைமணி வே.நடேசனின் கனவான அந்தக் கலையரங்கை அமைக்கும் பணியை விரைவாக்கி, முற்றுப் பெறச் செய்து, அந்த அரங்கில் இசைநிகழ்ச்சிகளும், பரத நாட்டிய நிகழ்ச்சிகளும் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் சிறப்பாக நிகழும் வண்ணம் செயற்படுவதே அமரர் நடேசன் அவர்களுக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும்.

**வயலூர் முருகன்**

# விடுதலையின் காலப்பதிவான கேணல் கிட்டுவின் ஓவியங்கள்



ஓவியக்கலை வரலாற்றில் எம் மண்ணில் தனியொரு அத்தியாயமாகத் திகழ்பவர் மூத்த தளபதி கேணல் கிட்டு. எமது மண்ணில் வாழ்ந்து, தமது போரியல் வாண்மையால் அளப்பெரிய வெற்றிகளைப் பெற்றுத் தந்த தளபதி கேணல்கிட்டு புகைப்படக் கலையிலும் தனித்துவமான ஒரு இடத்தைப் பிடித்தவர். அரசியலிலும் வல்லவராக விளங்கும் கேணல் கிட்டுவின் ஓவியங்கள் எமது விடுதலையின் காலப்பதிவாக அமைந்துள்ளது.

இயற்கையாகவே கலையார்வமும், பற்றுமுடைய இவர், மக்கள் மீது அளவுகடந்த பாசமும், பற்றும் வைத்திருந்தார். தலைவர் வழியில் நின்று போர் நடவடிக்கையில் ஈடுபட்ட இவர் தலைவரால் அரசியல் பணிக்காக ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டதன் பின்னர், ஓவியத்துறையிலும் தனது தடத்தைப் பதித்துக் கொண்டார்.

போர்க்குணம் மிக்கவரான இவர் ஆவணப்படுத்துவதிலும், அரசியல் மயப்படுத்துவதிலும் அதிக கவனமெடுத்தார். சிங்கள இனவாதிகளின் படு பயங்கரமான இனப்படுகொலைகள், போரின் கடும் வலிகள் என்பவற்றை ஆவணப்படுத்த வேண்டும் என்ற இவரது விருப்பிற்கு ஓவியம்சிறந்ததுறையாகஇருக்கும் எனக் கருதினாரோ என்னவோ, இவர் தானும் ஓவியம் வரைந்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகளில் பல நாடுகளுக்கும் சென்று, மாறி மாறி அலைந்து திரிந்து தமது அரசியல் பணிகளைச் செய்ய வேண்டி ஏற்பட்டதால் இவருக்கு ஐரோப்பிய நாடுகளில் ஓவியங்களைப் பார்க்கவும், அவைபற்றிய தத்துவங்களைப் புரிந்து கொள்ளவும் வசதியாக இருந்தது.

யாழ்ப்பாணத்தில் இருந்த போது, இவர் ஓவியர் மார்க்கோடு அதிக நட்புடையவராக இருந்ததால், இவருக்கு ஏற்கனவே ஓவியம் வரைவது பற்றிய ஆர்வம் இருந்திருக்கிறது. ஆயினும் அவர் இங்கிருந்தபோது ஓவியம் கற்றதாகவோ, வரைந்ததாகவோ அறிய முடியவில்லை. ஆனாலும், மார்க்கு அவர்களுடன் பலமுறை சந்தித்து கலந்துரையாடல்களைச் செய்திருக்கிறார்.

ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்த காலத்தில் இந்த ஓவிய ஆர்வம் அதிகரித்தமையும் இவருக்குக் கிடைத்த தலைமறைவு வாழ்நாட்களும் இவரை ஓவியம் படிக்கத் தூண்டியது. மெக்சிக்கோவில் ஒரு ஓவியரிடம் முறையாக ஓவியம் பயின்றார். 20 ஆம் நூற்றாண்டு ஓவியக் கொள்கைகள் பற்றிய அறிவைப் பெற்று தானும் பல ஓவியங்களை வரைந்துள்ளார்.

தைல வர்ணங்களைக் கொண்டு கன்வஸ்சில் ஓவியம் வரைந்த இவர், பின் நவீனத்துவம் பாணியில் அமைந்த ஓவியங்களை வரைந்துள்ளார். தனது ஓவியங்களில் ஒட்டுச்சித்திர நுட்பமுறைகளையும் பயன்படுத்தியுள்ளார். ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்தபோதும் இவரது கண்களால் பனிப்புகார்களையும், பல கிலோ மீற்றர் தூரத்தையும் தாண்டி தாய் நிலைத்தையே கண்டு காட்சியாக்கியுள்ளார்.

படுகொலைகள், எழுச்சிகள், போரின் வலிகள் எல்லாம் இவரது ஓவியத்தினூடாகத் தெரிகிறது. அங்கு வாழ்ந்த காலத்தில் அவர் தாயகம் பற்றிய எவ்வாறான எண்ணத்தோடு வாழ்ந்தார் என்பதற்கு தேர் என்ற ஓவியம் சிறந்த எடுத்துக்காட்டாக வுள்ளது.

சூரியனே வா என்று அழைப்பது போல் மக்கள் கைகளை உயர்த்தி நிற்கும் மற்றுமொரு ஓவியம் பொங்கு தமிழ் பற்றிய செய்தியாகவே தெரிகிறது. அவர் தீர்க்க தரிசனமாக மக்கள் எழுச்சியை இப்படிப் படமாக்கி இருப்பது எமையெல்லாம் வியக்க வைக்கிறது.

அரசியற் புறச்சூழல் காரணமாக ஐரோப்பிய நாடுகளில் மாறிமாறி பல நாடுகளுக்கும் சென்ற காரணத்தினால், அவர் வரைந்த ஓவியங்கள் எத்தனை எங்குள்ளன என்று அறிய முடியாவிட்டாலும், 20 ஆம் நூற்றாண்டின் உலகின் போக்குக்கு ஏற்ப எமது கதைகளைக் கூறி நிற்கும் 18 வரையான ஓவியங்கள் எம் தாயக மண்ணில் உள்ளன. இவரது ஓவியங்களின் காட்சி ஒன்று 1994 ஆம் ஆண்டு சுவிஸ் நாட்டில் இடம்பெற்ற போது, பல ஐரோப்பிய ஓவியர்களாலும், மக்களாலும் பாராட்டப்பட்டதாகவும் அந்த ஓவியங்கள் பற்றி நல்ல மதிப்பீடுகள் வழங்கப்பட்டதாகவும் அறிய முடிகிறது.

இராணுவ தளத்தில் படவரை கலைஞராக வாழ்ந்த லியனாடோ டாவின்சி பற்றிப் படிக்கிறோம். போரில் அப்பாவி மக்கள் அநியாயமாகக் கொல்லப்பட்ட செயலைச் சித்தரிக்கும் குவர்ணிக்காவை வரைந்த ஓவியர் பிக்காசோ பற்றிப் படித்தோம். எங்கள் மண்ணில் விடுதலைக்காகப் போராடி பல களம் கண்டு வெற்றி பல பெற்று போரியல் வல்லுநராகவும், அரசியல் வல்லுநராகவும் விளங்கிய கேணல்கிட்டு வரைந்த இந்த ஓவியங்கள் பற்றிப் படிக்க வேண்டும். பல தகைமை, ஆளுமை மிக்க மனிதனின் இந்த ஓவியங்களைக் கண்டு வியக்கும் எமக்கு அருகில் அந்த மனிதர் இல்லையே என்று ஒரு துயர் இருந்தாலும், அவர்முகம் இந்தப் படைப்புக் கள் ஊடாக எம்மோடு என்றும் இருக்கும்.

**சோ.சி.கலைக்கதிர்**
**சித்திர ஆசிரியர்**

## பசுவின் பெருமையை பாடுவேன் கேளும்!!

பசுவின் பெருமையைப்
பாடுவேன் கேளும்!
பசுவின் மகிமையைக்
கூறுவேன் கேளும்!!



பசுவின் உறுப்புகள்
ஒவ்வொன் றிலுமே
மூவரும் ரிஷிகளும்
முனிவரும் உறைகின்றார்!

பால் தயிர் நெய்யெனப்
பசுவின் கொடைகள்!
பசளையும் கன்றும்
பசுவின் கொடைகள்!!

வண்டியை இழுத்தவை!
உதவியாய் நிற்கும்!
வயல்களை உழுதவை
உதவியே நிற்கும்!!



பசுவின் சாணத்தைத்
தீயினாற் சுட்டுப்
பெறும் வெண்ணீறு
சிவசின்ன மன்றோ!!

பசுவைத் தெய்வமாய்ப்
பூசிப்பா ருண்டு!
பசுவை உண்வோர்கள்
புசிப்பாரு முண்டு!!

விரதங்கள் தொடர்ந்தால்
பால் உணவாகும்!
விரதங்கள் முடிந்தால்
பசு உணவாகும்!!

பவணந்தி முனிவர்
முதல்நிலை மாணவனைப்
பசுவுக் கொப்பிட்டுப்
பாடியுள் ளாரன்றோ!!

பசுக்களைச் செல்வமாய்ப்
போற்றினர் அன்று!
பசுக்களைத் தாயாகப்
போற்றினர் அன்று!!


பசுவின் பெருமையை
விரித்திடல் கூடுமோ?
பசுவின் பயன்களை
மறைத்திடல் கூடுமோ?

ஆண்டு முழுவதும்
பசுக்களைப் புசிக்கிறீர்!
ஆண்டில் ஒருநாள்
பூசித்தால் போதுமா?

பசுக்களைத் தெய்வமாய்ப்
பூசிக்கா திருப்பினும்
பசுக்களை உணவாகப்
புசிக்காது இருப்பீரோ?

**முருகு**

# ஈராக் முன்னாள் துணைப் பிரதமரின் உடல்நிலை மோசமான நிலையில்!



அம்மான் —

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைனின் ஆட்சிக்காலத்தில் துணைப் பிரதமராக இருந்த தாரிக் அஜீஸின் உடல்நிலை மிகவும் மோசமான நிலையில் இருப்பதாக அவரது வழக்கறிஞர் மற்றும் மகன் இருவரும் தெரிவித்தனர்.

தற்போது சிறையிலிருக்கும் அவரை விடுவிக்கவேண்டுமென்று இவ்விருவரும் கடந்த வியாழக்கிழமை செய்தி நிறுவனம்மூலம் வேண்டுகோள் விடுத்தனர்.

இருப்பினும் அவரது உடல்நிலையில் பின்னடைவு எதுவும் இல்லையென்று ஈராக் சிறைத்துறை அதிகாரிகள் மறுக்கின்றனர். ஜோர்தானில் வசித்துவரும் அஜீஸின் மகன் தனது தந்தையை சிறையிலிருந்து விடுவிக்க முயற்சிகள் எடுத்துவருகிறார். கடந்த கிறிஸ்மஸ் தினத்தில் ஜோர்தானிலிருக்கும் தனது குடும்பத்தினருடன் அஜீஸ் சில நிமிடங்கள் தொலைபேசியில் பேசுவதற்கு அமெரிக்க அதிகாரிகள் அனுமதியளித்தனர்.

# அணு ஆராய்ச்சியை தொடர ஈரான் அரசாங்கம் தீர்மானம்

தெஹ்ரான் —


அணுசக்தித் துறையில் முன்னணியிலுள்ள நாடுகளைச் சார்ந்திருப்பதைத் தவிர்ப்பதற்காக அணு ஆராய்ச்சிச் சோதனையில் ஈரான் தொடர்ந்து ஈடுபடும் என அந்த நாட்டின் ஜனாதிபதி முகமது அகமதினிஜாத் அறிவித்தார்.

ஈரான் அணுமின் சக்தி நிலையங்களைத் தொடங்கும் சாக்கில் அணு வாயுதங்களை இரகசியமாக தயாரிக்கத் திட்டமிட்டுள்ளதாக அமெரிக்கா சந்தேகிக்கின்றது.

ஈரானின் இரகசிய அணுகுண்டு சோதனை குறித்து மேற்கத்தேய நாடுகளுக்கும், ஈரானுக்குமிடையே பிரச்சினை உருவாகியுள்ளது. இந்தப் பிரச்சினை பற்றி விவாதிப்பதற்காக ஐரோப்பிய யூனியனில் உள்ள பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய மூன்று நாடுகளின் கூட்டம் பெர்லின் நகரில் நடந்தது. ஈரானின் அணுவாயுத சோதனை குறித்த பிரச்சினையில் ஐ.நா.சபை தலையிடவேண்டுமென்று இந்த நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

இந்த நிலையில் கடந்த வியாழன் ஈரான் மேற்கு மாகாணமான ஹோரார் முஸ்கானில் அந்நாட்டு ஜனாதிபதி முகமது அகமதினிஜாத் பேசும்போது கூறியதாவது:-

அணுசக்தி துறையில் முன்னணியில் உள்ள நாடுகள் இதை தங்களது பொருளாதார மற்றும் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்துகின்றன. அணு சக்தித் துறையில் மற்ற நாடுகளின் ஆதிக்கத்தை உடைப்பதற்காக ஈரான் தொடர்ந்து அணுவாராய்ச்சியில் ஈடுபடும்.



இந்தச் சூழ்நிலையில் எரிசக்தியில் வலிமைபெற அமைதி ரீதியிலான அணுத்தொழில்நுட்ப ஆராய்ச்சி தேவை என அகமதினிஜாத் கூறினார்.

# இறந்த நிலையில் கரை ஒதுங்கிய அரிய வகை மீன் புதைக்கப்பட்டது

இராமேஸ்வரம் —

மண்டபம் கடற்கரையில் உயிரற்ற நிலையில் ஒதுங்கிய அரியவகை மீன் பரிசோதனைக்குப்பின் புதைக்கப்பட்டது.

மன்னார் வளைகுடாக் கடலில் மீனவர்களின் இரட்டைமடி வலையில் சிக்கிய அரியவகை மீன் கடந்த 11 ஆம் திகதி மண்டபத்திற்குக் கடற்கரையில் இறந்த நிலையில் ஒதுங்கியது.

பனைமீன் என்றழைக்கப்படும் இந்த வகை மீன் பெரும்பாலும் ஆழ்கடல் பகுதியில் வாழக்கூடியது. 25 அடி நீளமும், 3 தொன் நிறையுள்ள மீனை நேற்றுமுன்தினம் கடல்வாழ் உயிரின பாதுகாப்பு அதிகாரிகள் முன்னிலையில் கால்நடை வைத்தியர் சண்முகசுந்தரம் பரிசோதனை செய்தார். இதன்பின் அந்த மீன் புதைக்கப்பட்டது.



# அமெரிக்க விமான விபத்தில் நான்கு படையினர் உயிரிழப்பு

அட்லாண்டா —

அமெரிக்கக் கடற்படைக்குச் சொந்தமான ஜெட் விமானம் ஒன்று 2 நாட்களுக்கு முன்பு டென்னசி நகரிலிருந்து புளோரிடாவுக்குப் புறப்பட்டது.

வழியில் ஜோர்ஜியாவில் அது விழுந்து நொருங்கியபோது அதிலிருந்த 4 வீரர்களும் பலியாகினர்.

கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்த விமானத்தைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணியில் இன்னுமொரு விமானம் ஈடுபடுத்தப்பட்டது.

அந்த விமானம் நாள் முழுவதும் தேடிய பிறகு விழுந்து நொருங்கிய விமானத்தின் உடைந்த பாகங்களைக் கண்டுபிடித்தது.









தைத் திருநாளை முன்னிட்டு வடபோர்முனை முன்னரங்க நிலைகளில் உள்ள போராளிகளுக்கிடையிலான சூட்டுப்போட்டி நடைபெற்றது. அவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வடபோர்முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் சூட்டுப்போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். நிகழ்வில் களமுனைத் தளபதிகளும், போராளிகளும் பங்குபற்றினர்.

# சீனாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 20 ஆயிரம் மக்கள் அகதிகளாயினர்

பீஜிங் —

சீனாவின் தென்கிழக்குப் பகுதியில் கடந்த வியாழன் ஏற்பட்ட கடுமையான நிலநடுக்கத்தால் 13 ஆயிரம் வீடுகள் இடிந்து தரைமட்டமாயின. இதையடுத்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசித்த 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அகதிகளாயினர்.

சீனாவின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள மலைகள் சூழ்ந்த மாகாணம் யுன்னான். இந்தப்பகுதியில் உள்ள 67கிராமங்களில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் வசித்துவந்தனர்.


இங்கு கடந்த வியாழன் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 5.0 என பதிவானது. இதில் 13 ஆயிரத்து 752 வீடுகள் இடிந்து தரைமட்டமாயின. நிலநடுக்கத்தால் ஏராளமான பாடசாலைகளும் மருத்துவமனைகளும் இடிந்து வீழ்ந்தன. தண்ணீர் மற்றும் போக்குவரத்து வசதியும் அடியோடு பாதிக்கப்பட்டது.

இதில் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை. ஒருவருக்கு மட்டும் காயம் ஏற்பட்டது. நிலநடுக்கத்தால் ரூ. 31.5 கோடி அளவிற்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக, சீன செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது. வீடுகளை இழந்த 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அகதிகளாயினர்.

சீனாவின் தென்கிழக்கு மாகாணமான ஜியான்க்சியில் கடந்த நவம்பரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 13 பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.



# சச்சினின் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்ட பாகிஸ்தான் பொலிஸார் இடைநிறுத்தம்



லாகூர் —

சச்சின் டெண்டுல்கரை சந்திக்க லாகூரில் அவர் தங்கியிருக்கும் ஹோட்டலுக்குள் தங்களது உறவினர்களை அனுமதித்த பாகிஸ்தான் பொலிஸார் இருவர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி தற்போது லாகூரில் முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடிவருகிறது. அங்குள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் இந்திய வீரர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அந்தப்பகுதியில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த வியாழக்கிழமையன்று அங்கு பாதுகாப்புப் பணியில் இருந்த 2 பொலிஸார் தங்களது உறவினர்களை சச்சின் தங்கியிருக்கும் அறைக்குச் செல்ல அனுமதியளித்துள்ளனர். அவர்கள் சச்சினிடம் ஒட்டோகிராப் வாங்க வந்ததாகக் கூறப்படுகிறது.

இந்தத் தகவல் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைமைப் பாதுகாப்பு அதிகாரியாகவிருக்கும் ஹொகைல் கான் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது. இதையடுத்து சம்பந்தப்பட்ட பொலிஸார் இருவரும் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.


# ரஷ்யாவில் ரயில் மோதி 17 மாணவர்கள் மரணம்

மொஸ்கோ —

ரஷ்யாவில் ரயில்மீது பஸ் மோதியதில் பள்ளி மாணவர்கள் 17 பேர் இறந்தனர். 5 பேர் காயமடைந்தனர். இந்தத் தகவலை அரசின் இடார் டாஸ் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

கிராஸ்நோடர் மாகாணத்தில் நேற்றுமுன்தினம் இந்த விபத்து நடந்தது. மாணவர்களை ஏற்றிவந்த அந்த பஸ் வாரநேஷ்கயா ரயில் நிலையம் அருகே உள்ள ரயில்வே கடவையைக் கடக்க முற்பட்டது. அப்போது அந்த வழியாக வந்த ரயில் மீது பஸ் மோதியது.

# அல்கொய்டா அமைப்பின் முக்கிய தளபதி பலி?



இஸ்லாமாபாத் —

அல்கொய்டா அமைப்பின் முக்கிய தளபதியாக செயற்பட்டுவந்த அல் ஜவாரி கொல்லப்பட்டதாக அமெரிக்க - பாகிஸ்தானிய இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆப்கானிஸ்தான் எல்லையருகே அமெரிக்க ராணுவ விமானங்கள் நடத்திய தாக்குதலில் அவர் கொல்லப்பட்டுவிட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

உலக நோக்கு

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மன்னார் கடற்படை தளபதியை கொலை செய்வதற்கு திட்டமாம்

## பொலிஸ் தரப்பு எச்சரிக்கை

கொழும்பு —

மன்னார் கடற்படையின் கட்டளையிடும் அதிகாரி கொமாண்டர் நிகால் சந்திரசிறியை கொல்வதற்காக பெண் கரும்புலிகள் ஊடுருவியுள்ளதாகக் கிடைத்த தகவல்களையடுத்து - பொலிஸாரும் இராணுத்தினரும் சோதனை நடவடிக்கைகளை அதிகரித்துள்ளதாக மன்னார் மாவட்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் வந்துள்ள பெண் கரும்புலிகள் குறித்து தேசிய இரகசிய தகவல் மற்றும் இராணுவ புலனாய்வு மூலமாக இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதன்படி இந்த இரண்டு புலனாய்வுப் பிரிவுகளும் மன்னார் படையதிகாரிகளுக்கு கரும்புலிகள் குறித்த தகவலைத் தெரிவித்துள்ளன.

பொலிஸ் மற்றும் இராணுவம் இணைந்து மன்னாரைச் சூழவுள்ள பிரதேசங்களில் வீடுகள் உள்ளிட்ட சந்தேகமான இடங்களை சோதனையிட்டுள்ளதுடன் 800 இற்கும அதிகமானவர்களிடம் இது குறித்து விசாரணையும் நடத்தியுள்ளனர்.

இந்தத் தகவலையடுத்து கடற்படை அதிகாரி கொமாண்டர் நிகால் சந்திரசிறியின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. அவரது போக்குவரத்து குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (தே)

### அமெரிக்க...

தலைவர் ரணில் விக்கரமசிங்க மற்றும் வெளிநாட்டமைச்சர் மங்கள சமரவீரவையும் நிக்கலஸ் பேன் சந்திக்கவுள்ளார்.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் அமெரிக்காவின் முன்னாள் பிரதி இராஜாங்கச் செயலாளர் ஆர்மிரேஜ் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட பின்னர், தற்போது வரும் அமெரிக்க உயர் அதிகாரி நிக்கலஸ் பேன் என்பது குறிப்பிடத்தக்கது. (தே)

## ஊர்காவற்துறையில்...

இந்தச் சம்பவத்தில் - குளியாப்பிட்டியைச் சேர்ந்த குமாரசிறி அலகல்ல (வயது 29) மற்றும் பத்திரணலாகே பிறேமசிறி (வயது 22) ஆகிய கடற்படையினரே உயிரிழந்தவர்களாவர்.

இவர்களின் சடலங்கள் காரைநகர் கடற்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டது. அங்கு நேற்றுமாலை சென்ற ஊர்காவற்துறை நீதிபதி பால சுப்பிரமணியம் மரண விசாரணை நடத்திய பின்னர் சடலங்களை கொழும்புக்குக் கொண்டுசெல்ல உத்தரவிட்டார்.

இந்தத் தாக்குதலை விடுதலைப் புலிகளே நடத்தியதாக கடற்படைப் பேச்சாளர் பி.தசநாயக்க தெரிவித்தார்.

இதனிடையே இந்தத் தாக்குதல் சம்பவத்தையடுத்து சம்பவ இடத்தைச் சூழவுள்ள பகுதிகளில் கடற்படையினர் சுற்றிவளைத்த கடற்படையினர் தேடுதல் நடத்தினர்.

புளியங்கூடல் அம்மன் கோயிலுக்கு அருகில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இருவர் கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்டதாகவும் தெரியவருகிறது.

## மட்டக்களப்பில்...

இந்தச் சம்பவத்தையடுத்து வடக்கு - கிழக்குப் பகுதிகளில் அமைந்துள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகங்களுக்கு நேற்று முதல் மேலதிக பாதுகாப்பு வழங்குவதற்கு அரசாங்கம் முன்வந்துள்ளது.

இந்தக் குண்டுத் தாக்குதலையடுத்து, எமது பாதுகாப்பு நிலைமை குறித்து அவதானமாக ஆராயவேண்டியுள்ளது.

இந்தத் தாக்குதலின் பின்னணியில் யார் உள்ளனர் என்பதனை எம்மால் அனுமானிக்க முடியாது. எமக்கு எந்த உதவி தேவையெனினும் செய்யத் தயாராக இருப்பதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது. மட்டக்களப்பு அலுவலகத்தை மூடுவது குறித்து தற்போது நாம் முடிவுசெய்யமுடியாது. இவ்வாறான சூழலில் எமது பணிகளைத் தொடரவே நாம் முயற்சிப்போம். ஆனால் நிலைமை மேலும் மோசமானால், அதன் பின்னர் எம்மால் பணிகளைச் செய்யமுடியாமல்போகும்.

இந்தத் தாக்குதலை யார் நடத்தினார்கள் என தற்போது எதனையும் கூறமுடியாது. அலுவலகத்தில் நின்ற வாகனமொன்றின்கீழ் வெடிபொருள் பொருத்தப்பட்டிருந்ததை கருத்தில் கொள்ளும்போது, இதற்கு முன்கூட்டியே தயாரிப்பு வேலைகள் இடம் பெற்றிருப்பதை ஊகிக்க முடியும்.

எமது அலுவலகத்திற்கு அருகில் முகாமொன்றுள்ளது. இந்த நிலையில் எவ்வாறு ஒரு நபர் வந்து குண்டைப் பொருத்திவிட்டு சென்றார் என்பது எமக்குப் புரியவில்லை. இதன்மூலம் எமது பாதுகாப்பு மீறப்பட்டுள்ளது. எமது அலுவலகத்துக்கு பொலிஸ் அதிகாரி ஒருவரும் காவல் கடமையில் உள்ளார். எங்கு வைத்து இந்தக் குண்டு பொருத்தப்பட்டதென்ற கேள்வியும் தற்போது உள்ளது. இவற்றுக்கு எமக்கு இதுவரை பதில் தெரியாது.

மட்டக்களப்பு கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் பணியாற்றிய இருவருக்கு அச்சுறுத்தல் இருந்தது தான். அதனை மிரட்டல் என நான் கூறமாட்டேன். அது சிலவேளை வாய்மூலமான மிரட்டலாக இருக்கலாம். இவ்வாறான மிரட்டல்கள் எமக்கு விடுக்கப்படுவது இது முதற்தடவையல்ல.

அவ்வாறான சூழல் வரும்போது அதனை நாம் ஆராய்வோம். உண்மையில் அந்த நிலைமை சரியாகிவிட்டது. ஆனால் தற்போது இருப்பது மிகவும் சிக்கலானதொரு நிலைமையாகும். அப்படியான குழு எதுவும் இந்தப் பின்னணியில் இருக்கின்றதா என்பது குறித்து இந்த நிலையில் ஒரு முடிவுக்கு வர நான் விரும்பவில்லை. இந்த விடயம் குறித்து எமக்கு எந்தத் தடயமும் கிடைக்கவில்லை.

சமாதான முயற்சிகள் குறித்தே எமக்கு பெரும் கவலையாக உள்ளது. போர்நிறுத்தத்தை கண்காணிக்கவே நாம் உள்ளோம். ஆனால் பாதுகாப்பு நிலைமைகள் மோசமடைவது பெரும் பிரச்சினையாக உள்ளது. இந்த நிலை மோசமடைந்தால் நாம் செயற்படமுடியாது. அது போர்நிறுத்த ஒப்பந்தத்துக்கு மட்டுமல்ல, சமாதான முயற்சிகளுக்கும் பாதிப்பாக அமையும்.

மட்டக்களப்பில் கண்காணிப்புக் குழு தனது பணியை நிறுத்துவது குறித்து இதுவரை எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை. இந்த விடயங்களை ஆராய்ந்து இவ்வாறான முடிவுகளை எடுக்க எமக்கு கால அவகாசம் தேவை. அதுவரை எமது குழு அங்கு இருக்கும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தத் தாக்குதல் நடந்த மட்டக்களப்பு வாவிவீதி இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இருப்பதுடன் - அங்கு ராசிக்குழு என்ற இராணுவ துணை ஆயுதக் குழுவினர் தங்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

துணை ஆயுதக்குழுக்களால் தான் கிழக்கில் போர்நிறுத்த உடன்பாடு மிக மோசமடைந்துவிட்டதாக கண்காணிப்புக்குழு தலைவர் அறிக்கை வெளியிட்ட மறுநாளே இச்சம்பவம் இடம் பெற்றது.

இதனிடையே கண்காணிப்புக் குழு அலுவலகத்தின்மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்படவில்லையென்றும் - முன்னரே புதைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்றே வெடித்ததாகவும் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது.

# ஹர்த்தால் விலக்கப்படவில்லை: சிங்கள அமைப்பு தெரிவிப்பு!

திருகோணமலை —

திருகோணமலையில் மேற்கொள்ளப்பட்டுவந்த ஹர்த்தால் விலக்கிக் கொள்ளப்படவில்லையென வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பும், சிங்கள விடுதலைவாதிகள் அமைப்பும் தெரிவித்துள்ளன.

கடந்த 12 ஆம் திகதிமுதல் இந்த ஹர்த்தால் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இந்த நிலையில் கிழக்கு சிங்கள அமைப்பு தமது கடையடைப்பை நிறுத்திக்கொள்வதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜயசேகர அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அவர்மீதும், அவரது ஆதரவாளர்கள்மீதும் திருகோணமலை அபயபுர பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனையடுத்து நேற்றுக்காலை கிழக்கு சிங்கள சங்கத்தின் ஜானக சுசந்த என்பவருடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டார். இதன்போது கிழக்கு சிங்கள மக்களின் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக ஜனாதிபதி உறுதியளித்தார்.

இதன்பின்னர் கிழக்கு சிங்கள அமைப்பினர் ஒலிபெருக்கிமூலம் ஹர்த்தால் போராட்டம் நிறுத்திக் கொள்ளப்படுவதாக அறிவித்தனர்.

எனினும், கடையடைப்பை ஏற்பாடு செய்திருந்த வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பினர் தமது போராட்டம் தொடர்வதாக நேற்று மாலை அறிவித்தனர். ஜே.வி.பியினர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுவதாக அவர் குற்றம் சுமத்தினர்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பின் இணைப்புச் செயலாளர் சுனில் அலுத்கமகே -

ஜே.வி.பியினர் அரசாங்கக் கட்சியில் இணைந்துள்ள நிலையிலேயே சிங்கள மக்கள் மீது குற்றங்களைக் காணமுனைவதாக அவர் தெரிவித்தார். (01)

## 3 குடும்பஸ்தர்கள் திருமலையில் கைது!

திருகோணமலை —

திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான மூதூரிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்ற மூன்று குடும்பஸ்தர்கள் இராணுவத்தினரால் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்றுக்காலை பொங்கல் தினத்துக்கான பொருட்களை வாங்குவதற்காக வந்திருந்தவேளை - பாலநகர் என்ற இடத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டனர்.

மூதூர் கடற்கரைச்சேனையைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான அரசரட்ணம் குகராசா (வயது 39), அதேயிடத்தைச் சேர்ந்த சந்திரசேகரன் ஈஸ்வரன் (வயது 34), கதிகாமத்தம்பி ஆனந்தன் (வயது 26) ஆகியோரே கைதுசெய்யப்பட்டனர். (04-10)

## இரு படையினர் காயம்!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - ஏறாவூரில் இராணுவ சோதனைச்சாவடி மீது நேற்றுப் பிற்பகல் நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் இரு படையினர் காயமடைந்தனர்.

நேற்றுப் பிற்பகல் 1.30மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் இரு படையினர் காயமடைந்ததையடுத்து மூன்று தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

## கிளைமோர் மீட்பு

யாழ்ப்பாணம் —

நல்லூர் பகுதியில் வீதியோர மின்கம்பம் ஒன்றில் கிளைமோர் கண்ணிவெடியொன்று கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டதாக இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

நேற்றுக்காலை நல்லூர் சட்டநாதர் கோவிலடிப் பகுதியில் படையினர் சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொண்டனர். இதனால் பொதுமக்கள் வீதியில் நடமாட அனுமதிக்கப்படவில்லை.

இந்த நிலையில் வீதியோர மின்கம்பம் ஒன்றில் கிளைமோர் குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாக இராணுவத்தரப்புத் தெரிவித்தது.

## சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - ஆரையம்பதியில் இளைஞர் ஒருவர் நேற்று மாலை சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயித்தியமலை - புன்னைச்சோலையில் நேற்றுமாலை 3.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நவீன் ராசன் (வயது 29) என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

### அம்பாறையில்...

இந்த வகையில்தான் சிங்கள ஊடகங்களில் - விடுதலைப் புலி உறுப்பினர்கள் 6 பேரை கருணா குழுவினர் கொன்றுள்ளதாக வெளியான செய்தி முற்று முழுதான பொய்யான செய்தியாகும்.

இந்தச் செய்தியை உருவாக்குவதற்காக தேசவிரோதக் குழுவினர் அம்பாறை - மாதோட்டம் என்ற இடத்தில் அமைத்திருக்கும் விசேட அதிரடிப் படையினரின் முகாமிலிருந்து சாகாமம் என்ற இடத்தில் மாடுகள் மேய்த்துக்கொண்டிருந்த இளைஞர்களை அடித்துத் தாக்கியதோடு அவர்களைத் துன்புறுத்தினர்.

பின்னர், அவர்கள் அக்கரைப்பற்று கிராமத்தில் அமைந்திருக்கும் இராணுவ முகாமுக்குச் சென்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## உயர் படைத்தளபதிகள் மன்னார் விஜயம்



மன்னார் —

கூட்டுப்படைத் தளபதி அட்மிரல் தயா சந்தகிரி மற்றும் இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனல் சரத் பொன்சேகா உள்ளிட்ட உயர் படை அதிகாரிகள் குழுவொன்று நேற்று மன்னாருக்கு விஜயம் செய்து பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்தது. நேற்றுக்காலை மன்னாருக்குச் சென்ற இந்த உயர்மட்டக்குழுவினர் சிரேஷ்ட இராணுவக் கடற்படை அதிகாரிகளுடன் மன்னார் மாவட்டத்தின் பாதுகாப்பு நிலவரம் தொடர்பாக விரிவாக ஆலோசனைகளை நடத்தியதாகத் தெரியவருகிறது.

அத்துடன் படை முகாம்களுக்கும் விஜயம் செய்து அவற்றின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக நேரில் மதிப்பீடு செய்தனர்.

நேற்று மாலைவரை இவர்கள் மன்னாரின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று நிலைமையைப் பார்வையிட்டு கொழும்பு திரும்பியதாகத் தெரியவருகிறது. அண்மையில் மன்னார் மாவட்டத்தில் அதிகரித்துவரும் தாக்குதலையடுத்தே இவர்களின் இந்த விஜயம் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

### திருமலையில்...

லெப். குமுதன்ஃநற்செழியன்

(தர்மலிங்கம் சுரோஸ்ரூபன் 7ஆம் வட்டாரம் கட்டைப்பறிச்சான்).

2ம் லெப் யசோ

(நாகராசா இராசன் 3ஆம் கொலணி- கிளிவெட்டி) ஆகிய போராளிகளே வீரச்சாவடைந்தனர்.

## திருமலையில் கிரனேட்...

பிரதிநிதிகளிடம் அவர் தெரிவிக்கையில் -

நண்பர் ஒருவரை எதிர்பார்த்து 3.10 மணிமுதல் இவ்விடத்தில் நான் நின்று கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த நீலநிற ரீசேர்ட் அணிந்த இரு இளைஞர்கள் அங்கிருந்து என்னை போகுமாறு கூறினர் நான் போக மறுத்ததை அடுத்து என்னைத் தாக்கி தள்ளி விழுத்தினர்.

பின்னர் அந்த இளைஞர்கள் குறித்த வீட்டின் மீது கைக்குண்டை எறிந்துவிட்டு வேகமாக அங்கிருந்து புறப்பட்டு, 50 மீற்றர் தூரத்திலிருந்த திருமலை - கண்டி வீதியிலுள்ள விமானப்படை காவலரணுக்குள் ஓடியொழிந்தனர் எனத் தெரிவித்தார்.

கைக்குண்டு வெடித்ததைத் தொடர்ந்து காயமடைந்தவர்கள் உதவிகோரி அப்பக்குரல் எழுப்பிய போதும் வீட்டுக்கு மிக அண்மையில் கடமையிலிருந்த பொலிஸாரோ, விமானப்படையினரோ உதவச் செல்லவில்லை.

இந்த நிலையில் சம்பவம் பற்றி திருகோணமலை மாவட்ட கண்காணிப்புக்குழுவினரிடம் அயலவர்கள் அறிவித்ததை அடுத்து, அங்கு சென்ற மாவட்ட கண்காணிப்புக் குழுத் தலைவர் ஆர்த்தர் டுவிற்றன், காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்ல உதவினார்.

இதேவேளை - சம்பவம் பற்றி அறிந்து உதவிக்கு விரைந்த அயலவர்களான தமிழர்கள், விமானப் படையினரால் தாக்கி விரட்டப்பட்டதாகவும் தெரியவருகிறது. இந்தச் சம்பவத்தையடுத்து அந்தப் பகுதி முழுவதும் பொலிஸார் மற்றும் விமானப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. (10)

D.C.M
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
A/L 2008
பொருளியல்
S.வரதராஜன்
ஆரம்பம் : 16.01.06 திங்கள் 3.30 (பு.நே)
(சி-5005)

A/L 2008
ஸ்ரார் கல்வி நிலையம்
சுன்னாகம்
கலை வர்த்தக வகுப்புக்கள்
ஆரம்பம்:- 15.01.2006 ஞாயிறு
வர்த்தகம்:- 9.00மணி கலை:- 4.00மணி
Acc:- சீலன்
Bu.st:- உமாகாந்
Tamil:- பாலா
Drama:- சுதன்
GEO: I.S.ஜெகன்
Eco:- மோகன்
Log:- R.P. சர்மா
H.cu:- சந்திரன்
CHR:- கொலின்ஸ்
P.Sc:- தீபன்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 15.01.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.